[illegible]

V 5 No 21 26 My 1932

BL
ത211, N28KN
M32.54
188969

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

5 - JUL 1932

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 5]. 1932 ௵ மே ௴ 26௳ [No. 21

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 401
2. தமிழ்ப்பாடம்
நளவெண்பா - சுயம்வரகாண்டம் 403
3. ஸ்ரீ வைகுந்தநாதர் பிள்ளைத்தமிழ் (அம்புலிப்பருவம்.) கி. வெங்கடசாமி ரெட்டியார் 405
4. குன்றுடையானும் மக்களும்
W.V. கோவிந்தசாமி ராஜு B.A.,L.T. 407
5. பெனிடிக்ட் டி ஸ்பைனோஸா
T. R. இராஜகோபால் 408
6. ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 3. களம் 1.)
ஷேக்ஸ்பியர் நாடகம் 411
7. நம்மாழ்வார் வைபவம் (2-ம் பத்து 10-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 413
8. கம்பராமாயணம் (சூர்ப்பணகைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 414
9. வர்த்தமானம் 419

கலாநிலயம்

வித்தகமோ விதிவசமோ. 13.

விதி என்ற சொல்லைச் சொன்னமாத்திரத்தில் மனிதர் மனங்களில் இருளும் பயமும் மரணமும் அடர்ந்தவோர் உருவமே எழுகின்றது. இடுகாட்டிற்குக் கொண்டேகும் வீதியின் குறுக்கல் விகாரமேபோல் மனிதர் விதியினைக்கருதுவது ஏனென்று விளங்கவில்லை. எனினும், வாழ்க்கை நிகழ்கின்ற வழிகளில், இடுக்கண்கள் யாவற்றையும் விட மிக உயர்ந்த இன்பங்கள் எய்தியதில்லையோ! மனிதர் இவைகளைக் கவனிப்பதில்லை தெருவிலே இருவர் அழுதுகொண்டு நடந்தால் எல்லோரும் அவ்வவலத்தைப் பின்தொடர்ந்து என்ன என்ன வென வினவுவார்கள். இருவர் சிரித்துப் பேசிக்கொண்டுசென்றால் எவரேனும் கண்ணெடுத்துப் பார்க்கின்றார்களோ! குழந்தையை இழந்து அழுகின்ற ஒருத்தியைக்கண்டு, இவள்விதி இருந்தவாறு என்னே, என்று வருந்துதற்குப் பலர் கூடுவார். குழந்தையின் முகங்கண்டு கூறமாட்டா இன்பமோடு உற்றுநோக்கிச் சித்திரம்போல் நிற்கின்ற ஓர் அன்னையை வியந்து சூழ்வார் இலர். மகவை இழந்தவள் துன்பத்திலும் அதனை உவந்து நோக்குவாள் இன்பமோ குறைந்ததன்று. எனினும், துன்பமே பலர்காணத் தோன்றுகின்றது. இன்பமோ தானேயும் அறியமாட்டாமல் நிகழ்கின்றது. இதுவல்லது வேற்றுமை பிறிதில்லை. ஆதலாற்றான் விதியினை நாம் இன்பத்துடன் தொடர்புபடுத்தி நினைப்பதில்லை. இந்தப் பிழை மனிதர்க்கு இயற்கையாயிருப்பதால் வித்தகத்தின்செய்தி வெளிப்படாமற்போகின்றது. வித்தகர்களின் வாழ்க்கையைச் சோதிக்குங்கால் அவர் வடித்த கண்ணீரையே குறித்துப் பேசுகின்றார்களன்றி இன்பமுடன் அவர் முகத்தில் தவழ்ந்த இளநகைகளைக் கணக்கெடுப்பதில்லை. இவர்களுக்கு விளைந்த இன்பங்களும் விதியின் வசமாகலாமே. விதியின் செய்கையை நாம் நீதியுடன் மதிப்பிடுவதில்லை. நம் துன்பங்களை மட்டும் அதன் தலையில் சுமத்தி, மற்று, இன்பங்களின் பொறுப்பையும் அதற்கு ஈயாமல் மறுப்பது நீதியாமோ!

மற்று, நல்லவர்களுக்கு ஊதியமும் தீயவர்களுக்குத் தண்டனையும் செலுத்தியே விதியானது எப்பொழுதும் நீதியுடன் நடக்கின்றதென்று யாம் இயம்பவரவில்லை. ஊதியம் ஒன்று வேண்டுமென்று எதிர்பார்த்துவிட்டால் பிறகு எந்த ஆன்மாதான் நல்லதென்றுரைப்பதற் குரியதாகும். எனினும் விதியின் தன்மையை நாம் மதிக்கப் புகுங்கால், அவ்விதியைக் காட்டிலும் அநீதியாய் நினைக்கத் தலைப்படுகின்றோம். வித்தகர்களின் துன்பங்களை மட்டுமே நம் கண்கள் காண்கின்றன; ஏனெனில் நாமெல்லாரும் அறிந்திருப்பது துன்பமே. வித்தகர்கள்தம் இன்பங்களின் தன்மை அளவு தோற்றம் முதலியவைகளைத் தெரிந்துணர்ந்து கொள்வதற்கு நாமும் வித்தகர்களாயிருக்கவேண்டுமாகையால் ஜனங்கள் இதனை எளிதில்தேர்ந்துகொள்வதற் கியல்வதில்லை. வித்தகர்க்கெய்தும் துன்பங்கள் மட்டுமே மற்றவர்க்கெய்துந் துன்பங்களை ஒத்திருக்கின்றன. எனினும் வித்தகத்தின்வழி நில்லாதவர்கள் இன்பங்கள் என மகிழ்கின்றவைகளுக்கும், வித்தகர்கள் அநுபவிக்கும் இன்பங்களுக்கும் எவ்வித ஒற்றுமையுமில்லை. துன்பத்தின் குரல் எப்பொழுதும் எவ்

விடத்தும் ஒன்றே; இன்பமோ ஆழவாழ நாவெழாமல் உள்ளூறத் தவழலாகின்றது. இவ்விடயத்தைப் பற்றி மாரிஸ் மேடர்லிங்க் பேசுங்கால் அவர் உரைத்துள வாக்கியங்கள் மிகவும் அருமையானவை:—

When a man of inferior soul endeavours to estimate a great sage's happiness, this happiness flows through his fingers like water; yet it is heavy as gold and as brilliant as gold in the hands of a brother sage. For to each is the happiness given that he can best understand.

"When we put our misfortunes into one scale of the balance, each of us lays, in the other, all that he deems to be happiness. The savage flings feathers, and powder and alcohol into the scale; civilized men some gold, a few days of delirium; but the sage will deposit therein countless things our eyes cannot see—all his soul, it may be, and even the misfortune that he will have purified.

தாங்கள் அநுபவித்தமையால் தாமமைடைந்த துன்பங்களேயுமே தமது துயரத்திற்கு ஈடான இன்பங்களாகக் கருதுமவ் வித்தகத்தின் இலக்கணத்தை உணர்தற்கு முயற்சி மிக வேண்டும். ஆயினும் அம் முயற்சியால் வரும் ஊதியத்திற்கு இவ்வுலகடங்கலும் பற்றாதே.

வித்தகர்தம் துன்பமோ தோற்றுவதாக அவர் அநுபவிக்கும் இன்பம் தெரியாமலிருப்பதாயின் அவர்க்கு இன்பம் உளதென்று ஏனையோர் தெரிந்துகொள்ளுமாறு எவ்வாறு என்று நம்மனோர் ஐயுறவெய்துதல் இயற்கையே. எனினும், இதனைத் தெளிவதும் எளியதே. உள்ளத்தின் நிலைமை அவரவர் செய்கையே காட்டித்தரும். மற்றவர்க்கு நன்மை செய்து நீதியுடன் நடந்துகொள்வது வித்தக உணர்வின் வெளித்தோற்றம். வித்தகத்தின் உள்நிலை உவகை என்றும், அதன் வெளித்தோற்றம் பிறர்க்குதவியாம் பெருஞ்செயல்கள் என்றும் நாம் அறிந்துகொள்ளல் வேண்டும். கருணையுடன் அளிப்பவரும், தம் கடமையை அரிதின் இயற்றி முடிப்பவரும், தம் உள்ளத்தில் வித்தகத்தால் பிறந்த இன்பத்தை நடத்திவைக்கின்றவராவார். பிறர்பொருட்டுத் தம்மையும் தமதுடைமையையும் ஈயாதார் கடையாவார்; ஈத்துவக்கும் இன்பம் அறிந்து நாடுபவர் இடையாவார்; உவகையால ஈகின்றவர் மனிதரில் முதன்மையாய வித்தகர். இவ்வித்தகர்களை யடைந்து. "ஐயன்மீர், உந்தம் பேரறிவின் பெற்றி யாது; அதனாற் சுரந்த இன்பத்தின் தன்மை யாது; அதனல், அந்தமைப் பிறர்பொருட்டு உதவுதற்கு அமைவதும் எங்ஙனம், இதனை எமக்கு விளங்கச் செப்புவீர். தெருண்ட மேலவர்களாகிய உங்களுக்கு இது அருமையன்றே" என வேண்டினோமாயின், தக்க விடைபெற்று மீள்வோமென நம்புதற்கில்லை. இவ் விடயங்களை ஆராயப்புகுங்கால் அவருமே மருளுவார். இதுவே தெருண்டவர் மருட்கை என்னப்படும்.

இச்செவ்வியில், "சுயநலமறுப்பு" என்றும், "தியாகம்" என்றும் எங்கெங்கும் இக்காலம் பரந்துவரும் கருத்துக்களின் உண்மையை நாம் சிறிது சோதிக்க வேண்டியவர்களாகின்றோம்.

தியாகமென்பதனை இருவகைகளாகப் பிரிக்கலாம். தன்னுடைய சுகத்தை நாடாமல் பிறருடைய சுகத்தை நாடுவது ஒன்று; மற்றது, மற்றவருடைய சுகத்தின் பொருட்டுத் தனக்குத் துன்பத்தை நாடிக்கொள்வது. பொதுஜன நன்மைக்கென்றும், சுயநாட்டின் அன்பினுக்கென்றும், தம் கடமையை முற்றிலுஞ் செலுத்தித்தீர்வதென்று தலைப்பட்டிருப்பவர்களில் இவ்விருதிறத்தோரும் உளரெனினும் இப் பின்னைய இனத்தவர்கள்தாம் பெரிது உத்தமர்களென்று பாராட்டப் பெறுகின்றனர். ஒருவகையில் நோக்குங்கால் இது தக்கதே. ஆயினும் இங்கு உள்ளூற ஊர்ந்து அறிதற்கொன்றுளது

இவ்வுலகின்கண், தம் உடல் பொருள் ஆவிகளைத் தியாகஞ் செய்வதே தம் கடமையின் கோடியாகும் என்றெண்ணி விவகரிக்கும் நன்மாக்கள் எண்ணிறந்தோர் எங்கும் உளர். நல்லவர்கள் இவர் பாவம்! எனினும் இயற்றவேண்டியது ஈதென்று தெரியாமல், உயிரையுந் துறப்பதனின் உயர்ந்த தருமம் வேறில்லை என மதித்து அவ்வுயிரைத் துறப்பது எங்ஙனம் என வழிகள் நாடியலைபவர் எத்தனைபோ பலர். பார்ப்பவர் கண்களுக்குப் பகட்டாயிருக்கின்றதெனினும், உண்மையில், இது பெரும்பாலும் பிழைபுடைத்தென்பதை ஓர்ந்துகொள்ள அகன்ற கல்வியும், விரிந்த கேள்வியும், கூரிய அறிவும் வேண்டும். இயற்றவேண்டியது யாது என்பதை ஐயமறத் தெளிந்துகொள்ளவேண்டுவதொன்றே கடமைகளிலெல்லாம் முதற்கடமை; நம்முடைய உடலையும் பொருளையும் ஆவியையும் எதன் பொருட்டு அளிக்கவேண்டுமென்பதைத் தேர்ந்துகொள்ளவல்ல சக்தியே யன்றோ மெய்யாய பெருமையாகும். தன்னுடைய கடமை இதுவென்று அவனவன் எண்ணிக்கொண்ட வளவிலேயே அது நன்மையும் சிறப்பும் வாய்ந்த கடமை என்பதற்குரிய கடமை ஆகிவிடாது. கடமை என்ற சொல்லினுள் எத்தனைபோவித பாவங்கள் அடங்கிவிடலாம். ஐவர் தமக்கு முரியாளை மன்னவையில் துகிலுரிந்து மாசு செய்த துரியோதனனைத் தொலைக்குமாறு தாம் புரிந்த விரதமொழிகளை நிறைவேற்ற வேண்டுவதே தம் கடமை என்ற வீமனனையோர் எண்ணினர். இன்னணம் பழிக்குப்பழி தீர்ப்பதைக் கடமையென்று கருதாமல் ஒழிப்பவர் மிகச்சிலர். "நின் பகைவரைப் பொறுத்தி" என்னும் வித்தகவாக்கின்முன் இக்கடமையின் தன்மை என்னை? இப்படியே நாம் தியாகமென்று கருதுவன பல தம் உயர்வினின்று நீங்கிப் பின்னிடும்படி உணர்த்தவல்ல வித்தகர்கள் வந்து சிலநிரந்தர நீதிகளை உரைக்கவுங்கூடும். மானுட நல்வாழ்விற்கு, களவு கொலை முதலிய தீமைகளைவிடக் கொடியதோர் பொல்லாங்கு, புரிகின்ற கருத்துக்கள் சில, தியாகம் கடமை ஏழ்மை முதலியவைகளைச் சார்ந்து நடமாடுகின்றனவே. வித்தகமுடையவர் இதுபற்றி என் சொல்கின்றார்களென்பதை இனிச் சிறிது நோக்குவோம்.

18969

தமிழ்ப் பாடம் 21.

நள வெண்பா—சுயம்வர காண்டம்

[388-வது பக்கத் தொடர்ச்சி]

ஏழுலகுஞ் சூழிருளா யென்பொருட்டால் வேகின்ற
ஆழ்துயர மேதென் றறிகிலேன்—பாழி
வரையோ வெனுநெடுந்தோண் மன்னனோ தின்னு
மிரையோ விரவுக் கியான். 107.

பதப்பிரிவு:—ஏழ் உலகும் சூழ் இருள் ஆய் என் பொருட்டால் வேகின்ற ஆழ் துயரம் ஏது என்று அறிகிலேன் பாழி வரையோ என்னும் நெடும் தோள் மன்னனோ தின்னும் இரையோ இரவுக்கு யான்.

பொழிப்புரை:—"ஏழு உலகங்களும் சூழ்ந்த இருளை உடையனவாகி என்பொருட்டு வேகின்ற இந்த ஆழ்ந்த துயரம் அடைவதற்கு என்ன காரணம் என்று நான் அறியமுடியவில்லை. வலியமைந்த மலையோ என்று (கண்டவர்) நினைக்கும்படி உயர்ந்த தோள்களையுடைய நளவேந்தனே, இவ்விரவு தின்னுவதற்குரிய உணவோ நான் ஆகவேண்டும்" என்று தமயந்தி இரங்கினள். [பாழி - வலிமை]

விரிவுரை:—அந்நாள் இருளானது தன்னை வருத்துவதற்கே அடர்ந்து வந்ததென்று தமயந்தி எண்ணி, தன்பொருட்டு வந்ததாயினும் இவ்விருள் உலகம் முழுவதும் சூழ்ந்து வருத்தம்செய்யும் என மதித்து, தானொருத்தி காரணமாக அனைத்துயிரும் அவத்தைப் படுவது நீதியல்லவே, இவ்வநீதி நிகழ்வதற்கு யாது காரணம் என வியப்படைகின்றனள்.

குறிப்பு:—இந்தச்செய்யுளில் மூன்று ஓகார இடைச்சொற்கள் வந்திருக்கின்றன. அவைகளில், வரை என்பதை அடுத்துவந்த ஓ, நளனது தோளைப் பார்ப்பவர், இது தோளோ அல்லது மலையேதானோ என்று சந்தேகப்படுவர் என்னும் கருத்தைத் தருவதால் அங்கு ஐயப்பொருள் உடையது. மன்னனோ, என்றதில் உள்ள ஓகாரம் தன்னுடைய துயரத்தைக் காட்டுகின்றபடியினால் இரக்கப்பொருளில் வந்திருக்கின்றது. இரையோ, என்றதில் உள்ள ஓகாரம் "உனக்கு மனைவியாக வேண்டிய நான் இவ்விரவிற்கு உணவாகப் போவதும் கூடுமா" என்ற கருத்தைக்கொண்டு கேட்கின்றபடியால் இரக்கத்தோடுகூடிய வினாப்பொருளில் வந்துளது.

கருவிக்கு நீங்காத காரிருள்வாய்க் கங்கு
லுருவிப் புகுந்த தாலூதை—பருகிக்கார்
வண்டுபோ கட்ட மலர்போன் மருண்மாலை
யுண்டுபோ கட்ட வுயிர்க்கு. 108.

பதப்பிரிவு:—கருவிக்கு நீங்காத கார் இருள்வாய் கங்குல் உருவி புகுந்தது (ஆல்) ஊதை பருகி கார் வண்டுபோகட்ட மலர்போல் மருள் மாலை உண்டு போகட்ட உயிர்க்கு.

அன்வயம்:—கார்வண்டு பருகிப் போகட்ட மலர் போல், மருள்மாலை உண்டு போகட்ட உயிர்க்கு, ஊதை, கருவிக்கு நீங்காத கார் இருள்வாய்க் கங்குல் உருவிப் புகுந்தது.

கருத்து:—தமயந்தியை மேன்மேலும் வருத்துதற்குக் குளிர்காற்றும் இப்பொழுது அடிக்கலாயிற்று என்று கவி கூறுகின்றார்.

பதவுரை.

கார் - கரிய
வண்டு - வண்டுகள்
பருகி - தேனைக்குடித்து
போகட்ட - விட்டுவிட்ட
மலர்போல் - மலரைப்போல்,
மருள் - மயக்கம் உண்டாக்குகின்ற
மாலை - சாயங்காலமானது
உண்டு - தின்று
போகட்ட - விட்டுவிட்ட
உயிர்க்கு - (தமயந்தியின்) உயிரைத்தானும் [தின்பதற்கு,
ஊதை - குளிர்காற்றானது,
கருவிக்கு - கவசத்திற்கு நிகராக
நீங்காத - பிளக்கமுடியாத
கார் - கரிய
இருள் - இருட்டு
வாய் - வாய்ந்த
கங்குல் - இரவை
உருவி - ஊடுருவிப்பாய்ந்து
புகுந்தது - புகுந்தது

விரிவுரை:—கருவி என்றதற்குக் கவசம் என்ற அர்த்தம் உண்டு. இரவைச் சூழ்ந்த இருளை அதன் கவசமாகக் கவி இங்குக் கூறியிருக்கின்றார். கருவிக்கு என்றதன்பின் 'நிகராக' என்ற ஒருசொல் பொருள் பூர்த்தியாவதற்காக வருவித்துக்கொள்ளலாம். (வாய்க்கங்குல் என்பது வினைத்தொகையாயினும் வலிமிகுந்தது இலக்கணை). இந்த இருளென்னும் கவசத்தையும் பிளந்துகொண்டு குளிர்காற்று உருவிப்புகுந்தது எதற்காகவென்றால், தமயந்தியின் உயிரிற்கு, அதாவது அவளது உயிரைத் தின்பதின் பொருட்டு. அவ்வுயிரோ எனின் முன்னலேயே மாலைக்காலம் உண்டுவிட்ட மிச்சில். வண்டுகள் பருகித்துறந்த பூ அதற்கு உவமை.

எழுந்திருக்கு மேமாந்து பூமாந் தவிசின்
விழுந்திருக்குந் தன்னுடம்பை மீளச்—செழுந்தாளத்
தாளோடு சேர்க்குந் துணையேது மில்லாதே
நாணோடு நின்றழியு நைந்து. 109.

பதப்பிரிவு:—எழுந்து இருக்கும் ஏமாந்து பூ மா தவிசில் விழுந்து இருக்கும் தன் உடம்பை மீள செழும் தாளம் தாளொடு சேர்க்கும் துணை ஏதும் இல்லாதே நாணொடு நின்று அழியும் நைந்து.

கருத்து:—நளன் வந்து தன்முன் நிற்பதுபோல் மனப் பிரேமையால் கருதிய தமயந்தி செய்தவைகளை இச் செய்யுள் குறிக்கின்றது

பதவுரை.

ஏமாந்து - (நளனது உருவத்தைக்கண்டு) மகிழ்ச்சியுற்று
(ஒருபோது)
எழுந்திருக்கும்— எழுந்திருப்பாள். (ஆனல் அதற்குள் அவ்வுருவம் மறைந்துவிடவே)
பூ - பூக்களும்

18969

மா - மாந்தளிரும் (பரப்பிய)

தவிசின் - ஆசனத்தில் [பாள்.

விழுந்திருக்கும் - (மறுபோது) விழுந்து கிடப்

[மறுபடியும் அவ்வுருவம் தோன்ற இம்முறை இவனை விடப்படாதென்று எழுந்து ஓடிப் பற்ற நினைப்பவளாய்]

மீள - இன்னொருமுறை

தன் - தன்னுடைய

உடம்பை - உடம்பை

செழும் - செழுமையான

தரளம் - முத்தைப்போன்ற

தூணோடு - தூணினோடு

சேர்க்கும் - அணைத்துக் கொள்வாள்.

[அத் தூணின் குளிர்ச்சியால் மயக்கம் நீங்கத் தன் நினைவு பெற்று]

துணை - தன் துணைவன்

ஏதும் - ஒன்றும்

இல்லாதே - அங்கு இல்லாமையாமல்

நாணோடு - (தூணைத் தழுவிய) வெட்கத்தினால்

நின்று - திகைத்து நின்று

நைந்து - சோர்ந்து

அழியும் - தளர்வாள்.

விரிவுரை:—இச்செய்யுள் உருவெளித் தோற்றம் என்று காதலர்க்கு நிகழ்கின்றவொரு செய்தியைச் செப்புகின்றது. மெய்க்காதல் உற்ற இருவர் எப்பொழுதும் இடைவிடாமல் ஒருவர் உருவத்தை மற்றவர் தம் உள்ளத்தில் நிலைநிறுத்தி நினைத்தவண்ணமா யிருப்பது இயற்கை. உள்ளத்திலே எவ்வுருவம் எக்காலும் பயில்கின்றதோ அவ்வுருவம் ஒவ்வொரு வேளையில் வெளியிலேயும் தோன்றும்படி நேர்வது மனதின் குணம். இரவிலே தனிவழிச் செல்வோன் ஒருவன் பிசாசு ஏதேனும் வருமோ வருமோ வென ஊன்றி எண்ணுவதால் அவன் மனதிலே பிசாசு இன்னபடி இருக்கும் என்று கற்பித்துக்கொண்ட வுருவம் மனதைவிட்டு வெளியாகி எதிரே தோன்ற நேர்கின்றது. பேயை நினைத்தவனுக்குப் பேய் தோன்றுவதுபோல் காதலரை நினைத்தவர்க்கு அக் காதலர் உருவம் எதிர் வந்து இயங்குவதும் வியப்பன்று. இக்காலத்தில், பேய் மாத்திரம் தோன்றக் காதலர் உருவெளி தோன்றும் அநுபவம் ஒருவருக்கும் நேராததற்குக் காரணம், பேயைப் பயத்தால் நினைக்கின்ற அளவு யாரும் காதலரை அன்பால் நினைக்கின்றவர் இல்லாமையே ஆகலாம்.

காதல் மிகுதியுங் கொண்டு மயக்கமுற்றவர் கண்களுக்கு உளளத்திருந்த உருவம் வெளிவந்து தோன்கின்றபடியால் இந்நிகழ்ச்சிக்கு இலக்கியங்களில் உருவெளித் தோற்றம் என்ற பேர் தந்தனர். தமயந்திக்கு இப்பொழுது நளனுடைய உருவம் வந்து எதிரே தோன்றுகின்றது. அப்படித் தோன்றியபோது தமயந்தி செய்த செயல்களைக் கவி வர்ணிக்கின்றார். நளனது உருவைக் கண்டவுடன் அவள் மகிழ்ச்சியோடு எழுந்திருந்தாள். அதற்குள் உருவம் மறைந்துவிட்டது. ஆதலல் மனஞ் சோர்ந்து அவள் படுக்கையில் விழுந்துவிட்டாள். பிறகு சிறிதுநேரம் பொறுத்து அவ்வுருவம் மறுபடிவந்து அவளருகிலேயே நிற்பதாகத் தோன்றியது. இந்தச் சமயம் அருகணைந்த நளனைக் கைகடக்க விடப்படாது என்னும் ஆர்வத்தால் தமயந்தி விரைவினிற் பற்றி யணைத்துக்கொண்டாள். உண்மையிலேயே பக்கத்திலிருந்த தூண் ஒன்றுதான் அவள் கண்ணிற்கு நளனாகத் தோன்றியது. தூணைத் தழுவியதும் அதன் குளிர்ச்சிபட அவள் மயக்கந் தெளிந்து தன்நினைவு பெற்றாள். பெற்றவள் என்ன கண்டாள்? தானொரு தூணைத் தழுவிநிற்கக் கண்டாள். நள்ளிரவில் தனியிடத்தில் ஒருத்தி கம்பத்தைக் கட்டிக்கொண்டு நிற்கின்ற நிலையில் தன்னையே தான் கண்டனள் என்றால் அவளுக்கு விளைகின்ற வெட்கத்தை அளக்கவும் வேண்டுமோ! முன்னிருந்த காதலோடு இவ்வெட்கமும் கூடச் சேர்ந்ததால் சோர்வெய்தித் தளர்ந்துபோயினாள்.

காதல் உதிப்பதுமுதல் அந்தக் காதலர் மணந்துகொண்டு வாழ்க்கை நடத்தும் வரையில் அவர்களது எண்ணங்களையும்நிலைமைகளையும்செயல்களையும்பற்றி விரித்துரைக்கின்ற இலக்கணத்திற்கு அகப்பொருள் இலக்கணம் என்று பெயர். அதன் வரலாற்றை ஸ்ரீமான் இராமஇரத்திநம் ஐயர் அவர்கள் இப்பத்திரிகையின் 1928 ஆண்டு இதழ்களில் மிகவும் அழகாக எழுதியிருக்கின்றார். இவைகளெல்லாம் சிற்றின்பச் செய்தியாகத் தோன்றினாலும் வாஸ்தவத்தில் அவை பேரின்பத்தின் பிரதிபிம்பங்களே யாகும். பேரின்ப நாடகத்தை மனிதர்மூலமாய் நடித்துக் காட்டுவன இவ்வகப்பொருள் செய்திகள் யாவும். நாயகனை நினைத்தவளுக்கு நின்ற தூணெல்லாம் நாயகனாகத் தோன்றுவது ஒன்று. பரம்பொருளை நினைத்தவர்க்குக் காணும் பொருளெல்லாம் அப்பரம்பொருளேயாய்த் தோன்றுவதும் அதுவே, வேறில்லை. தாயுமான சுவாமிகள் தம் முதற் பாடலிலேயே

> கண்டனவெலா மோனவுருவெளியதாகவுங்
> கருதி யஞ்சலிசெய்குவாம்

என இவ் வகப்பொருள் பரிபாஷையை உபயோகித்துத் தன் ஆன்மானுபவத்தைத் தெரிவிக்கின்றார். பரம்பொருளைத் தியானம் செய்தவண்ணமா யிருப்பவர்களுக்கு வெளிப்பொருள் ஒவ்வொன்றும் அதுவேயாகத் தோன்றுவதும் உருவெளித் தோற்றந்தான்.

குறிப்பு:—1. ஏமாந்து என்றால் மகிழ்ச்சியுற்று என்பது அர்த்தம். ஏமாப்பு - களிப்பு. இதை ஏமாறல் என்று வழக்கத்தில் வருகிற பதத்தோடு மயங்க வேண்டா. "அவன் என்னை ஏமாற்றிவிட்டான்" என்று வஞ்சித்தல் என்னும் பொருளில் உபயோகப்படுகிற பதம் ஏமாறுதல். இந்தச் செய்யுளில் வந்த பதம் ஏமாத்தல். ஏமாறு என்னும் பதத்திற்கு இலக்கியப்பிரயோகம் இருப்பதாகத் தெரியவில்லை.

2. எழுந்திருக்கும் விழுந்திருக்கும் சேர்க்கும் அழியும், என்ற இவைகள் செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்றுக்கள். எழுந்திருப்பாள், விழுந்திருப்பாள், சேர்ப்பாள், அழிவாள், என்று வழக்கத்தில் சொல்வோம்.

விரிகின்ற மெல்லமளி வெண்ணிலவின் மீதே
சொரிகின்ற காரிருள்போற் சோரும்—புரிகுழலைத்
தாங்குந் தளருந் தழலே நெடிதுயிர்க்கு
மேங்குந் துயரோ டிருந்து. 110.

பொழிப்புரை:—நிலவின்மேல் இருள், சொரிவது போல் வெண்மலர் பரப்பிய படுக்கையின்மீது அவிழ்ந்து புரளும் தன் கூந்தலைக் கையில் ஏந்துவாள். தளர்

வாள். நெருப்புப்போல் பெருமூச்சு விடுவாள். துயரத்தோடு இருந்து ஏங்குவாள்.

உடைய மிடிக்கெல்லா மென்மேலே யோச்சி
விடிய மிடுக்கின்மை யாலோ—கொடியன்மேன்
மாகாதல் வைத்ததோ மன்னவர்த மின்னருளோ
வேகாத தென்னோ விரா. 111.

பொழிப்புரை:— "இருக்கின்ற தன் வலிமையை எல்லாம் என்மேலே செலுத்திவிட்டபடியால் விடிவதற்கு வேண்டிய வலிமை இல்லாததாலோ, அல்லது பாவியேன் என்மீது வைத்த பெருங்காதலால் என்னை விட்டுப்பிரிய மனங்கொள்ளாமலோ, எனது சுயம்வரத்திற்கு வந்திருக்கின்ற அரசர்களது அன்பைப்போல் எல்லையற்றதோ, இவ்விரவு போகாததற்கு என்ன காரணமோ தெரியவில்லையே" என்று தமயந்தி ஏங்கினாள்.

மயங்குந் தெளியு மனநடுங்கும் வெய்துற்
றயங்கும் வறிதே யுலாவும்—வயங்கிழைபோய்ச்
சோருந் துயிலுந் துயிலாக் கருநெடுங்க
ணீருங் கடைசோர நின்று. 112.

பொழிப்புரை:—பிரகாசத்தையுடைய ஆபரணங்களையணிந்த தமயந்தி மயங்குவாள், தெளிவாள், மனம் நடுங்குவாள், பெருமூச்சு எறிந்து வாடுவாள், வீணிற்கு உலாவுவாள், சோர்ந்து போவாள். தூங்காத அவள் கண்களின் கோடியிலிருந்து நீர்வடியத் தூங்கமுயல்வாள்.

விழுது படத்திணிந்த வீங்கிருள்வாய்ப் பட்டுக்
கழுதும் வழிதேடுங் கங்குற்—பொழுதிடையே
நீருயிர்க்குங் கண்ணோடு நெஞ்சுருகி வீழ்வார்த
மாருயிர்க்கு முண்டோ வரண். 113.

பதப்பிரிவு:—விழுது பட திணிந்த வீங்கு இருள் வாய் பட்டு கழுதும் வழி தேடும் கங்குல் பொழுது இடையே நீர் உயிர்க்கும் கண்ஒடு நெஞ்சு உருகி வீழ்வார்தம் ஆர் உயிர்க்கும் உண்டோ அரண்.

பதவுரை.

விழுது - விழுதுகள்

பட - இறங்கும்படி

திணிந்த - முதிர்ந்த

வீங்கு - மிக்க

இருள் - இருளில்

வாய்ப்பட்டு - அகப்பட்டு

கழுதும் - பிசாசுகளும்

வழி - வழி

தேடும் - தேடத்தக்க

கங்குல் - அவ்விரவாகிய

பொழுதிடையே - காலத்திலே,

நீர் - நீரை

உயிர்க்கும் - வடிக்கின்ற

கண்ணோடு - கண்களோடு

நெஞ்சு - மனமும்

உருகி - கரைந்து [வர்களுடைய

வீழ்வார்தம் - (தமயந்தியைப்போல்) விழுகின்ற

ஆர் - அருமையாகிய

உயிர்க்கும் - உயிரிற்குங்கூட

அரண் - காப்பு ஏதேனும்

உண்டோ - இருக்கின்றதோ.

விரிவுரை:—மிகவும் அடர்ந்து முதிர்ந்த ஆலமரத்தில் விழுது இறங்குவதுபோல் அவ்விருட்டும்விழுது விடக்கூடியதா யிருந்தது என்பது—'விழுதுபடத் திணிந்த வீங்கிருள்' என்றதின் கருத்து.

தமயந்தியைப்போல் இப்படி வருந்துகின்றவர்களுடைய உயிரிற்கு ஏதேனுங் காவலுண்டோ, அல்லது அவ்வுயிர் போய்த்தான் விடுமோ, என்று படிப்பவர்கள் மனதில் தோன்றுகின்ற சந்தேகத்தை 'உண்டோ' என்னும் சொல்லிலுள்ள ஓகாரத்தில் ஏற்றிக் கவி கேட்கின்றார். கேட்டு, அரண் உண்டு என்ன அடுத்த செய்யுளில் 'தமயந்தி துயரத்தோடு அன்றைப்பொழுதும் விடிந்தது' என்று தேற்றுகின்றார். பொருள் நோக்கி, செய்யுள்களின் தொடர்ச்சியும் நோக்கி 'உண்டோ' என்பதிலுள்ள ஓகாரம் ஐயப்பொருளது என்று தான் கொள்ளல்வேண்டும். எதிர்மறைப்பொருளில் வந்த வினா என்று எண்ணினால், அரணில்லை, ஆகையால் தமயந்தி இறந்துபோனாள் என்ற கருத்தைத் தரும்.

உண்டோ, என்பதற்குப் பதிலாய் உண்டே என்று பாடம் இருக்குமாயின், ஆருயிர்க்கும் என்பதிலுள்ள சிறப்பு உம்மையோடு இந்தத் தேற்ற ஏகாரமும் சேர்ந்து பொருள் சிறக்கும்; ஆயினும் ஈற்றடியின் ஓசையின்பம் குறைகின்றது.

ஸ்ரீ வைகுந்தநாதர் பிள்ளைத்தமிழ்

[390-வது பக்கத் தொடர்ச்சி]

7. அம்புலிப் பருவம்.

சாமம்

சொன்னவரை வளைவை யிவனடிமை யென்னுமுரை
சொன்னவரை யென்றும் வளைவான்
சுழிதருங் குணகடலில் வருவை யிவனுமோ
சுபமிகுங் குணகடலுளான்
மின்னமர்செழுங் கலாநிதி மலர்த்தெரிவை
மேவிய கலாநிதியிவன்
வேளைநிழல் செய்வை யிவனுலகி னுயிர்களையெவ்
வேளையினு மருணிழல்செய்வான்
மன்னுமம் புயமறுத் திடுவை யிவனும்
விறல்வான னம்புயமறுத்தான்
வளர்சோதி மூவர்க்கு ளொருவனீ
இவனுமூ வர்க்குளொரு சோதியாவான்
அன்னவகை பார்க்கினீ யிவனைநிக
ராதலா லம்புலீ யாடவாவே
அடலரவி னடனமிடு வைகுந்த
நாதனுட னம்புலீ யாடவாவே. 1.

மானினி விடாதமறு மார்வமுளை நீயிவனு
மானினி விடாதமார்பன்
மதியான நாமத்த னீயிவன் தொண்டர்சம்
மதியான நாமத்தினன்
கானகத்தோ டதிசயந் தருவை கங்கை
கானகத் தோடதிசயங்

காட்டுமிவ னண்டர்பதி புகுவைநீ யண்டர்பதி
கைக்கொண்ட பெருமானிவன்
யானினி யுரைப்பதெ னிவன்றன்னை
நிகர்வையிது வின்றிமைத் தனனுமாவாய்
இருபக்க முண்டுனக் காயினு மிவன்பக்க
மின்றுவிளை யாடவேண்டும்
ஆனினந் துயர்தவிர வரையெடுத்
தானிவனொ டம்புலீ யாடவாயே
அடலரவி னடனமிடும்வைகுந்த
நாதனுட னம்புலீ யாடவாவே. 2.
கயல்விழி யிரேவதியை மருவலாற்
கதிரொடு கலப்பையுள தன்மையதனாற்
கருதிநீ லாம்பரம் பெறலா லுரோகணி
களிப்பவரு காதலனதாற்
செயல்மருவு காமபாலனன் முசலியெனு
மிருதிருப் பெயர்க்கிசையு மதனாற்
றிருமேனி வெண்மையாற் றனதுமுன் [ப்
றோன்றலாற் சேர்ந்துவிளை யாடவெண்ணி
புயல்பொரு தடக்கையம் பலதேவனென் றனைப்
பூங்கைவிரல் காட்டுகின்றான்
போதாது நீசேறல் போதாது
சண்பகப் பூந்தா தருந்தாதுவண்
டயல்மலர் விரும்புகவ நீதபுர
நாதனுட னம்புலீ யாடவாவே
அடலரவி னடனமிடு வைகுந்த
நாதனுட னம்புலீ யாடவாவே. 3.

பேதம்

கொண்டலி னொடுங்குமுன் மேனியொளியிவன்மேனி
கொண்டலொளி யினையொடுக்குங்
குறையும்வெண் கலையுனக் குள்ளதெவ்
வுலகும்விலை கூறரிய பொற்கலையுளான்
விண்டல மிரண்டிலக்கத் துயர்வைநீ
யிவன்விண் முகடுகிழிய வுயர்வான்
மிகுமயல்கொ ளேழைபர்கள் பகைவனீ
யேழைகளை விருதுகொடு காப்பவனிவன்
கண்டம டையுங்குறைப் பாந்தளுக்
குளைவைநீ கதிர்மணிச் சிரமாயிரங்
காட்டும்விட நாகணையின் வளர்வனிவ
னிமையவர் கவர்ந்துண்ணு மசனமாம்நீ
யண்டர்பெரு மானிவ னுனக்கதிக
மாதலா னம்புலீ யாடவாவே
அடலரவி னடனமிடு வைகுந்த
நாதனுட னம்புலீயாட வாவே. 4.
தோரா தவன்றுணைவனீ மறைப்பொரு
ளுண்மைதேர்ந்த பெரியோர் துணையிவன்
தேவினிற் சிறியனீ முப்பத்து
முக்கோடி தேவரிற்பெரி யோனிவன்
நீராரு நண்டினுங் கதிபனீ
பிரமன்முத னீடுயிர்க் கதிபதியிவன்
நிறையவுங் குறையவும் பெறுவைநீ
யிவனென்றும் நிறைகுறை யிலாதமுதலோன்
போது நீகோட்டும் வழிவரின்
னாகும் பிறப்பும்வரு மிவன்வழிவரிற்
பிறவிதவிர் பேரின்ப வீடுவரு
மாதலாற் பேதமிக வுண்டாயினும்
ஆராத கருணைமா னுதலி
னழைத்தானொ டம்புலீ யாடவாவே

அடலரவி னடனமிடு வைகுந்த
நாதனொட ம்புலீ யாடவாவே. 5.

தானம்

நெடுமுடிப் பஃறலைத் திரள்புயத்
தறுவலி நிசாசரர் பதிங்கொதுங்கி
நிதிமதினி லங்கையூர் புகவெருவி
போடுமுளை நிலைபொடு நடக்கவைத்தான்
சுடுசினக் கழல்விழிச் சடைமுடிப்
பாணடிக் ககனைத் தேய்த்தவுன்னைத்
தாணுக்கி ங்கா கிரிக்கெதிர் [யாங்
கிறக்கினன் தொடருமுன் பழைபகை
கடுமிடற் றாவையுங் கலைதணித் தானுன்வழி
காசினியி னீங்கிடாமே
கருவிலுன் குலமகளி னுயிரளித்தா
னினைகருதி யிவனுதவி பார்க்கில்
அடிமைநீ செயவேண்டு மாதலினெ
னையனுட னம்புலீ யாடவாவே
அடலரவி னடனமிடு வைகுந்த
நாதனுட னம்புலீ யாடவாவே. 6.
சோதிபொறு மேனியைக் கலையா னெனச்செய்து
தொலையாத வதுமானெனிற்
றட்டமா னுயிர்படவொர்வாளியிற்போக்குவான்
றொடர்கடைக் குறமுயலெனின்
நீதிசெறி வேட்டுவக் குகனிவன் றுணையதுவு
நீக்குமிது வன்றியரவின்
கெட்டெயி றகுத்தவிட மென்னில்வெங்
கலுழனொரு நீள்சிறைக் காற்றினதுபோம்
வேதனைசெய் நோயெனிற் கூனிசி மிரச்செய்த
விஞ்சையா னமையுமன்றே
மிகவின்னம் நீவேண்டு கருமமெல்லா
முற்றவித்து விழியென வளிப்பான்
ஆதியம் பொருளிவன் பெருமைநீ
யுணராய்கொ லம்புலீ யாடவாவே
அடலரவி னடனமிடு வைகுந்த
நாதனுட னம்புலீ யாடவாவே. 7.
பாயிருட் படலங் கிழிக்கெழும் பருதியும்
பனிமலர்த் தருநிழற்கோன்
பண்பறிந் தொழுகெழு மழைக்குலமும்
வெண்டிரை பரப்புதண் பாவையேழுங்
காயெரிக் கடவுளுங் கனகவட கிரியையுங்
கடலிடை மடுக்கும்வேகக்
காற்றினுக் கரசனுங் கடவுளுக் கிறைவனொடு
காசினி படைப்பனென்றே
தீயெழச் சினவுதவ முனியனைய முனிவருந்
தேவரும் பெருமஞ்சிச்
செய்கையிற் றிரியாது நிற்பதிவ னாணைதன்
சென்னிமேற் கொண்டதறியாய்
ஆயிரந் திருநாம முள்ளவெம் பெருமானொ
டம்புலீ யாடவாவே
அடலரவி னடனமிடு வைகுந்த நாதனுட
னம்புலீ யாடவாவே. 8.

தண்டம்

இத்தனை யழைக்கினும் விரைந்துவா
ராயென்னி லிரவியைக் கனியாகுமென்
றெயிறான்று கவியிவன் தூதனு மிமையவ
ரிருந்துகாக் கின்றவமுதைக்

கைத்தலத் திடைகொண்டு பணிகளுக் கீந்தவெங்
கலுழனிவ னூர்தியமுதின்
கலையுடையை தனியைவெளி யேதிரிவை
வேறுமொரு காவலிலை யதுவுமன்றி
முத்தமணி வெண்குடைச் சேனைபதி
யிவனெவன் முறைதிறம் பினரைவெற்றி
மூரிப்பிரம்பி னடித்துவெஞ் சிறையிடுதல்
முன்னமறி யாய்கொலென்றே
அத்தனையும் வருமுன்ன ரொருநொடியி
லோடிவந் தம்புலீ யாடவாவே
அடலரவி னடனமிடு வைகுந்த நாதனுட
னம்புலீ யாடவாவே. 9.
குணமுட னழைக்க வாராதநீ நந்தியங்
குன்றினெறி யன்றிவேறே
குறுகுநெறி யின்மையிற் செல்வையிதி
லிவன்முகங் கோடிய தறிந்தவுடனே
பணம்விரித் தொருகோடி யரவம் விழுங்கும்வெண்
பாற்கவள மென்றுமதமரப்
பணைநெடுங் கரநீட்டி வாய்க்கொள்ளும்
வெம்புலிகள் பாய்ந்துமானைக் கொடுசெலுங்
கணமும்வெங் கொலைவிடா வெயினர்முய
லாசையாற் கணைதுரந் திடுவர்முனமே
காயமேற் பட்டவுடற் காயம் பொறுதுபின்
காப்பவரு மில்லையப்போழ்
தணுகுவது நாணமிப் பொழுதேயெ
னையனுட னம்புலீ யாடவாவே
அடலரவி னடனமிடு வைகுந்த நாதனுட
னம்புலீ யாடவாவே. 10.

அம்புலிப் பருவம் முற்றிற்று.

குன்றுடையானும் மக்களும்

இரண்டாம் புத்தகம் — 3. கிளிப்போர்

[384-வது பக்கத் தொடர்ச்சி]

I

பொன்வள நாட்டின் நடுவில் இருப்பது வீரமலை. அம்மலைக்கு அப்பால மேற்கே உளது கொங்கு நாட்டு வேடுவர் சீமை. அச் சீமைக்குத் தலைநகர் தலையூர் என்பது. அக்காலத்தில் வேடுவர்களுக்குத் தலைவனுவான் அவ்வூரில் வாழும் வேட்டுவக் காளிமன்னன். அவன் தங்கை வீரதங்காள்; அவள் வேடுவர் குலதெய்வமாகிய மதுக்கரைக் காளியம்மன் வரத்தாற் பிறந்த வீர கன்னிகை.

வீரமலையில் வீரமலைக்காடு என்ற பெயர்கொண்ட ஒரு வனம் உண்டு. அவ்வனத்தின் நடுவில் பெரிய ஆலமரம் ஒன்று இருந்தது. அம்மரம் பல தலைமுறைகளாய் ஓங்கிவளர்ந்து, நெடுந்தூரம் நீண்டு பரவி விழுதுவிட்டுப் பலகிளைகளோடு விளங்கிற்று. மரமுழுதும் தளிர்களும் இலைகளும் பழங்களும் நிறைந்திருந்தமையால் அதனுள் சூரியகிரணங்கள் புகுதலும் அரிதாயிற்று. அம்மரத்தின் கீழே பலவருடங்களாய் உதிர்ந்த பழுப்பு இலைகளும் பறவைகள் இட்ட எச்சமும் அணில் கொறித்த பழங்களும் கிடக்கும். அவ்வனம் வேடுவர் எல்லைக் குட்பட்டது.

அவ்வனத்திலே, இவ் வாலமரத்திலே, ஆயிரக்கணக்கான கிளிகள் வசித்தன. அக் கிளிகள் யாவும் வீரதங்காளுடைய பாதுகாப்பிலே யாதொரு இடையூறுமின்றிப் பலவருடங்களாய் வாழ்ந்து, ஆணும் பெண்ணும் பெற்று எண்ணிக்கையிற் பெருகி, ஆலம் பழங்களைத் தின்று ஒவ்வொரு கிளையிலும் தங்கி, ஒன்றையொன்று கொத்தியும் பாடியும் மிக மகிழ்ந்து வாழ்ந்தன. அக் கிளிகள்செய் ஒலி அந்தக் காடுமுழுவதும் கேட்கும். அக்கிளிகளிற் பல நாள்தோறும் இம் மரத்தினின்று கிளம்பித் தலையூரைநோக்கிப் பறந்து வீரதங்காளின் அரண்மனையை யடைந்து, அவளால் உபசரிக்கப்பெற்று, மாலையில் தம் உறைவிடத்திற்குத் திரும்பும். வீரதங்காளும் அவ்வப்பொழுது தன் பரிவாரத்தோடு இக்காட்டிற்குவந்து, ஆலமரத்தின் அடியிற் றங்கி, கிளிகளோடு கொஞ்சிப் பேசி விளையாடிப் பின் தலையூருக்குத் திரும்புவாள். அக்கிளிகள் யாவும் அவளை நன்கறியும். அந்தக்கிளிகளினுள்ளே ஆணும் பெண்ணுமான இரு அரச கிளிகள் இருந்தன. அவை பேரழகுவாய்ந்த பஞ்சவர்ணக் கிளிகள்; அவற்றை வீரதங்காள் போற்றிவளர்த்தாள். இக்கிளிகளுக்குக் காவலாவது வீரதங்காள் பழக்கியுள ஒரு வேங்கைப்புலி. அது ஆலமரத்தினடியில் உறைந்து கிளிகளுக்கு யாதொரு தீங்கும் நேரிடாவண்ணம் காவல்புரிந்து காடுமுழுதும் திரியாநிற்கும்.

ஒருநாள் இவ் வரசகிளிகள் தமது பரிவாரத்தோடு புறப்பட்டு வீரமலையைக்கடந்து, சிற்றூலைப் பட்டணத்தையடைந்து தங்காள் அரண்மனைத் தோட்டத்து மாமரத்தில் சிறிதுநேரம் தங்கியிருந்தன. தாதியர் சொல்லக்கேட்டுத் தங்காள் வெளிவந்து கண்ணுற்றுப் பெண்கிளியின் பேரழகை வியந்துநிற்கையில் அவை பொள்ளெனப் பறந்து தமது உறைவிடம் நோக்கிச் சென்றன. பின்னும் சிலநாட்சென்றபின் அக்கிளிகள் மீண்டும் ஒருநாள் தங்காள்தோட்டத்தில் இறங்கின; பெண்கிளியைப் பிடித்து வளர்க்கவேண்டு மென்று விருப்புற்றுத் தங்கை அரசகிளிகளை யணுகுதலும், அவை கிடைப்பனபோல் தங்கையைச் சிறிது தூரம் இழுத்துச் சென்று அகப்படாமல் பறந்துபோயின. அக்கிளிகள் வீரமலைக்காட்டில் ஆலமரத்தில் வசிப்பன என்று தாதியர் சொல்லக்கேட்டுத் தங்காள் அப் பெண்கிளியை எங்ஙனமாயினும் பிடித்துக்கொணர்ந்து வளர்க்கவேண்டும் என்று விரும்பி, அதை நினைந்து நினைந்து ஏக்கமுற்று ஊணுறக்கத்தையும் துறந்தாள்.

சிலநாட் சென்றபின் தங்காள், ஓர் அவசரகாரியத்தின்பொருட்டு அகத்தியம் வரவேண்டுமெனக் குருத்தோலையெழுதி அண்ணன்மாருக்குத் தாதியர் மூலமாய் அனுப்பி, அவர்களை வரவேற்க வீதிபெருக்கிச் சாணந்தெளித்துக் கோலமிட்டுப் பட்டுப்பாய் விரித்துக்காத்திருந்தாள். அண்ணன்மார் குதிரையேறி வருகிற அதிர்ச்சிகேட்டுத் தாதியரோடு அரண்மனை வாசலுக்குச் சென்று எதிர்கொண்டு அடிதொட்டுக் கும்பிட்டு, திட்டி கழிக்க ஆலத்தியெடுத்தாள்; அண்ணன்

மாரது ஆசிபெற்று அவர்களை யுள்ளே யழைத்துச் சென்று பட்டுப்பாயில் வீற்றிருக்கச்செய்து, பாலும் இளநீரும் கொடுத்துத் தாகசாந்தி செய்வித்தாள்.

பெரியண்ணன்:—அம்மா தங்கையே எங்களை நீ அழைப்பித்த காரியம் என்ன?

தங்கை:—நீங்கள் ஒருவர்க்கொருவர் துணையாகி யிருக்கின்றீர்கள், உங்களுக்கொன்றும் குறைவில்லை; என்னை நீங்கள் மறந்தீர்கள் போலும்.

பெரியண்ணன்:—அம்மா உனக்கென்ன குறை? உன் கருத்தின்படியே உனக்குத் தனிமாளிகை கட்டுவித்தோம்; தாதியரை நியமித்தோம்; நாங்கள் உனக்கு எந்த விதத்திலே குறை செய்தோம்? குறையிருந்தால் சொல், அம்மா!

தங்கை:—இல்லை, அண்ணு அப்படி யொன்றும் குறைவில்லை; ஆயினும் ஒன்றுசொல்ல விரும்பினேன்.

சின்னண்ணன்:—அம்மா, உன்னை எங்கள் உயிரினும் சிறந்தவளாக நினைத்துப் போற்றிவருகிறோம். நீ நினைக்குமுன் அறிந்து நாங்கள் செய்யத் தவறினது யாதேனும் இருந்தால் வாய்விட்டுச் சொல். எங்கள் உயிரைக் கொடுத்தாயினும் உன் விருப்பத்தை நிறைவேற்றுகிறோம். நீ கவலைப்படக்கண்டு நாங்கள் சகிக்க மாட்டோம்.

தங்கை:—வீரமலைக்காட்டிலே ஓர் ஆலமரம் இருக்கின்றதாம். அம்மரத்திலே கூடுகட்டி ஆணும் பெண்ணுமாய் இரு அரசகிளிகள் வாழ்கின்றன. அவற்றிலே பெண்கிளி பேரழகு வாய்ந்தது. எனக்கு அது வேண்டும். நான் அதைப் பார்த்ததுமுதல் அதைப் பிடித்து வளர்க்கவேண்டு மென்று விருப்புற்றேன்.

பெரியண்ணன்:--அம்மா, பொன் கேட்கும் வாயால் புளியங்காய் கேட்டதுபோல் இந்தக் கிளிகள் வேண்டும் என்ருய். இது ஒரு பெரிய காரியமா? எத்தனை கிளிகள் வேண்டுமாயினும் கொண்டுவந்து கொடுப்போம்.

சின்னண்ணன்:—இதற்காகவா நீ இவ்வளவு பாடுபடவேண்டும்? இதோ ஒரு நொடியிற் கொண்டுவருகிறேன்.

தங்கை:—சின்னண்ணு, பொறு. இது அவ்வளவு எளிதான காரியமன்று. கிளிகள் இருக்குமிடமோ வேடுவர்க்குரியது. கிளிகள், வேட்டுவமன்னன் தங்கை வீரதங்காளுக்குரியன. இவை வசிக்கும் மரத்தினடியில் ஒரு வேங்கைப்புலி காவலிருக்கின்றதாம்.

சின்னண்ணன்:—நீ சொல்லும் கிளி தேவலோகத்தில் இருந்தாலும் நான் கொண்டுவந்து தருகிறேன், இதன்பொருட்டு இனி நீ கவலைப்படவேண்டா.

தங்கை:—வேடுவர் சீமையிலே எளிதில் நுழைதல் கூடாது. நீங்கள் தக்க காவலோடு போகவேண்டும்.

பெரியண்ணன்:—அம்மா, உன் எண்ணப்படியே நாங்கள் வேட்டை சாற்றுவித்துக் காவலோடு சென்று கிளியைக் கொண்டுவருகிறோம்.

என்றுசொல்லித் தங்கையின்பால் விடைபெற்றுத் தம்பியோடு அரண்மனைக்குத் திரும்பிச் சாம்பானை அழைத்து, "வருகிற திங்கட்கிழமை நாம் வேட்டைக்குப் போதல்வேண்டும். என்று பறைசாற்று," என்று உத்தரவிட்டார்.

அதுகேட்டுச் சாம்பான் "சுவாமி வேட்டை சாற்ற வேண்டுமானல் வெண்கலப் பேரிகை யடிக்கவேண்டும் தங்கள் பாட்டன்காலத்தில் வேளாண் குளத்தருகில் மரத்தில் மாட்டிய வெண்கலப் பேரிகை புதரால் மூண்டு பேய்க்காவலில் இருக்கிறது. உத்தரவானல் பூசைசெய்து புதர்நீக்கி அதை யெடுத்துவருகின்றேன்" என்றான்.

பெரியண்ணன், "நீ விரும்பியபடியே பூசை செய்து எடுத்துவா. பூசைக்கு என்னென்ன வேண்டும், சொல்" என்றார்.

சாம்பான், "நனைத்த கடலை பழம் தேங்காய் இரத்தச்சோறு வடை தோசை செங்கரும்பு களியுருண்டை சாராயம் கஞ்சா ஆட்டுக்கடாக்கள் கோழிகள், முட்டைகள் ஆகிய இவைகள் வேண்டும்" என்று பணிந்து கூறினன்.

பெரியண்ணன், "நல்லது ஊரிலுள்ள கடைகளில் உனக்கு வேண்டியவற்றை நான்சொன்னதாக வாங்கிக் கொள்' என்று கட்டளையிட்டார்.

சாம்பான் 'சித்தம்' என்று கும்பிட்டுத் தன் அன்னையிடம் சென்று, பொங்கல் வைக்கப் புது மிடாக்கள் கொண்டுவரும்படி சொல்லிவிட்டு, அவ்வூரின்கணுள்ள பெரிய செட்டிகடைக்குப் போய்த் தனக்கு வேண்டிய பொருள்களைக் கொடுக்குமாறு கேட்டான்.

செட்டியார், 'இத்தனை பண்டங்களை நான் எங்கிருந்து கொடுப்பேன்? இல்லையென்று சொன்னலும் கேடுவருமே!' எனச் சிந்தித்து, யாதொன்றும் செய்ய அறியாதவனுய் உள்ளேபோய்ப் பேசாமல் குறுக்கி முடக்கிப் படுத்துக்கொண்டான். சிறிதுநேரங் கழிந்தபின் செட்டியார் மனைவி அங்கேவந்து சாம்பான் வந்த காரியங் கேட்டு, உட்சென்று கணவனை யெழுப்பித் தேறுதல் சொல்லிக் கடையில் இருந்த பொருள்களைத் திரட்டிச் சாம்பானிடம் ஒப்படைத்தாள். சாம்பான் அவற்றை வாங்கித் தன் துப்பட்டியில் கட்டி, சாராயக் கடைக்கும் கஞ்சாக்கடைக்கும் சென்று வேண்டிய சாராயத்தையும் கஞ்சாவையும் வாங்கிக் கொண்டு வேளாண்குளத்தை யடைந்தான்.

பெனிடிக்ட் டி ஸ்பைனேஸா

[392-வது பக்கத் தொடர்ச்சி]

2. ஜீவிய சரிதமும் தத்துவப்போக்கும்.

ஐரோப்பாக்கண்டத்தில், ஹாலெண்டு தேசத்தில், ஆம்ஸ்டர்டாம் நகரில், 1632-ம் வருடம் நவம்பர் மாதம் 24-ந் தேதியில், யூதர் குலத்தினில் பிறந்தவர் பெனிடிக்ட் ஸ்பைனேஸா என்ற ஞானி.

மிக்க சாதாரண குடும்பத்தில் பிறந்து, வயிற்றுப் பிழைப்பின்பொருட்டுச் சாமானியத் தொழிலை மேற்கொண்டு இவர் வாணளைச் செலுத்திவந்தபோதிலும், பொறுமையுந் தயையும் வாய்மையும் அன்பும் ஞானமும் நிரம்பப்பெற்று விளங்கியதால், அக்காலத்தில் மிகப்பிரசித்திபெற்ற சீமான்களால் இவர் நட்புக்கொள்ளப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார். பிறர்முன் வாய் புதைத்துக் கைகட்டித் தலைசாய்த்துச் சுயமாண்பை இழந்து அடிமைகளாகச் சீவித்தல் இழிந்ததெனக் கொண்டவர் இவர். இவருடைய சிநேகிதர்களிற் பலர் பலதுறைகளில் இவருக்கு உதவிபுரிய முன்வந்தாராயினும், மேற்காட்டிய கொள்கையின் காரணத்தால், அவ்வுதவிகளை இவர் ஏற்காது மறுத்தனர். மட்டற்ற உண்டியும், பொருட்செல்வமும், பிறர்கீழ் ஊழியமும் ஒருவனுடைய சீரிய மனப்பாங்கைக் குலைப்பன எனவும், சுயத்வத்தைச் சுருக்கிட்டு அடக்குவன எனவும், ஆன்மப் பிரகாசத்தை அவிப்பன எனவும், புனித வாழ்க்கையின் மெய்ந்நோக்கத்தை அறிதற்கும் இடங்கொடாமல்தடுப்பன எனவுங் கொண்டவர். தனக்குண்டான துர்ச்சம்பவங்களால் மனத்தடுமாற்ற முருமல், உண்மைநெறியைப்பற்றி ஒழுகிய உத்தமஞானி இவர். ஞானம் அறம் அனையவைகளுக்கியன்ற விஷயங்களைப் பிறரிடம் பலாத்காரமாகப் புகுத்தக் கூடாதெனவும், இவ்வாறு செய்யின் தீமையே விளையுமெனவும், ஒவ்வொருவனும் தன் இயற்கைக் குணத்தையும் போக்கையும் அமைப்பையும் கசடற அறிந்துகொண்டு நேர்மையுடன் ஒழுகுவானுயின் வருந்த இடமில்லை யெனவும் அறிவித்த பெரியோர் இவர். ஈச்வரஞானம் பரிணமிக்கப்பெற்ற இவரை இவர்ஜாதியினர் நாஸ்திகரெனத் தூற்றியதுடன் நில்லாமல், ஜாதிப்பிரஷ்டமும் செய்தார்கள்! இம்மட்டோ, இவரைக் கொன்றுவிடச் சூழ்ச்சியும் செய்தார்கள்! இவர் அக் கயவர்களின் அவதூறுகளையும் கரவுச்செயல்களையும் பொருட்படுத்தினால்லர். மானுடர்தம் சீரிய குணநடத்தைகளுக்குப் பொருத்தமாய், யாவரும் எத்தகைய ஆக்ஷேபமுமில்லாது எளிதில் கைக்கொண்டு உயர்ந்து உய்தற்கான சன்மார்க்கத்தைக் காட்டியருளிய ஞானியாம் இவர். அறிவின் வளர்ச்சியால் அடையவேண்டியதோர் நிலைமையை இவர் பின்வருமாறு விளக்கியிருக்கின்ருர்:—

"உலக வாழ்க்கையில் மாந்தரிற் பெரும்பாலாரும் பொதுவாகப் பற்றித் தொடரும் பொருள்களெல்லாம் உபயோகமற்றன எனவும், பொறிக்கலக்கமும் உள்ளத் துடிப்பும் அச்சவுணர்ச்சியும் தேகநடுக்கமும் புகழ்ச்சியிகழ்ச்சிகளும் ஒருவனுடைய கருத்தின் வெறுங் கற்பனைகளே யல்லாமல், யதார்த்தத்தில், உலகாதிகள் அக்குணங்களைப் பெருக்கி, அவ்வுணர்ச்சிகளை யெழுப்பி நம்மை இயக்குவனவேனும் இயக்கக் கூடியனவேனும் அல்ல எனவும் அநுபவமூலமாகத் தெளிந்து, சீர்கெடச் செய்யும் அவலக் கவலை கையாறழுங்கல் முதலாயினவைகளின் அதி உக்கிர ஆர்ப்பாடங்களை அடக்கி, பல்வேறு பொருள்களையும் வழிகளையும் சம்பவங்களையும் பார்த்து மனக்குழப்பமுற்று, ஒன்றிலும் ஒன்ருது, அவமே ஓடித்திரிந்து வாடிமடியாமல் மனதை உறுதிப்படுத்தி நாட்டத்தை ஒருமுகப்படுத்தி, திருப்தி உணர்ச்சியை யெழுப்பிப் பெருக்கி இனித்திருக்க உதவிசெய்யும் அதி உத்தம நிரந்தர அசல பரிபூர்ண நன்மை ஒன்றுளதோ? உளதாயின் அதன் குணுதிசய மென்னை? அதை அறிந்து கடைப்பிடித்தற்கான உபாயம் யாதோ? என்பவைகளைப்பற்றி ஆராயப் புகுந்தேன். பொருட்செல்வம் கீர்த்தி செல்வாக்கு புலனுணர்ச்சிகளினின் றுண்டாகும் சுகத்தையும் பயன்களையும் பார்த்தறிந்து, அவைகளைப்பெற்று இரமிக்கலா மென்ருலோ, அவைகள் ஞானமும் அறமும் நிரம்பிய வாழ்க்கைக்கு ஆகாதனவாகத் தோன்றின. உயரிய சீலமுடைய வாழ்க்கையைப்பற்றி ஒழுக விரும்பினல் மாந்தர்களால் இச்சித்துப் போற்றப்படும் சுகபோகங்களையும் ஆசாபாசங்களையும் அறவே துறக்கவேண்டும்; தனம் புகழ் முதலாயினவைகளைப் பெற்றுக் களிப்புறவேண்டுமானல் முன்னதை முற்றிலும் மறக்கவேண்டும் எனத் தோன்றிற்று. ஏனெனில், நன்னெறியைக்கைப்பற்றி ஏகாக்ர சித்தமுடன் முன்செல்ல எண்ணுபவனைப் பின்னவைகள் எதிர்த்து அவன் மனதைக் கெடுக்கின்றன. புலனிச்சைவழிச் செல்பவர்கள் அதன்வயப்பட்டுச் சுகிர்தத்தைப்பற்றி நினைத்தற்கும் முடியாமல் சீரழிகின்றார்கள். அவாக்கள் பூர்த்தியாகப் பூர்த்தியாகப் பொறிகளின் மும்முர லீலைகள் அடங்காமல் மேன்மேலும் நானவித இச்சைகளைக் கிளர்த்திப் பெருக்கித் தோல்விப் போர்வையினல் பகுத்தறியும் சக்தியைமூடி ஏக்கமாகிய பாழினுள் அழுத்திவிடுகின்றன! கீர்த்தியையும் செல்வாக்கையும் அவலம்பித்து, அடைந்து அநுபவிக்க உழைப்போமாயின், சுயத்வத்தை இழந்து, பிறர்தம் போக்குக்களையும் அபிப்பிராயங்களையுமே கவனித்து நடிக்க நேரிடுகின்றது!

"இவைகளின் முடிபு யாதெனில், நானவித அவாக்களை விருத்திசெய்து, உயர்வு தாழ்வு நன்மை தீமை தனம் தரித்திரம் சுகம் துக்கங்க ளென்ற வேற்றுமைகளை அதிகரிக்கச்செய்யும் பொருள்களை நாடிப் பாடுபடுதலே மானுடர்களின் இன்னலிடர்களுக்கெல்லாம் மூலகாரண மென்பதேயாம். ஒருவராலும் விரும்பிக் கொள்ளப்படாத பொருள்களைப்பற்றி வழக்கும் வித்தியாசங்களும்உண்டாவதில்லை; அத்தகைய பொருள்களழியுமாயின் துக்கமும், பிறரால் அபகரிக்கப்படின் பொருமையும் கோபமும், கிடைக்குமோ கிடைக்காதோ என்ற ஐயமும், கிட்டியது நிலைத்திருக்குமோ இராதோ என்றகவலையும் அச்சமும் உண்டாவதில்லை. இவ்வுணர்ச்சி மாறுதல்களெல்லாம் அழிபொருள்களை அவாவி உழலுவதினின்றே உண்டாவன போலும். ஆனல், மாறி மறைவதும் தேய்ந்து அழிவதும் இல்லாதவோர் வஸ்துவின்மீது மனதைச் செலுத்தி நிறுத்தி உழைப்போமானல் பேரானந்தம் ததும்பப்பெற்று மனச்சாந்தி யடைவோம் என்ற விஷயம் விளங்கலாயிற்று. கொடிய நோயால் வருந்துபவன் அதை அதிசீக்கிரத்தில் போக்கக்கூடிய மருந்தையும் முறையையும் அறிந்து அவற்றைப் பற்றித் தீர்மாணத்தினின்று தப்பிப்பிழைக்க மிக்க ஊக்கத்துடன் முயற்சித்தல்போல், மேற்சொல்லிய விபரீத விபத்துக்களால் கவரப்பட்டு, அவைகளினின்று எவ்விதத்திலாயினும் விடுபட்டு உய்யவேண்டுமெனத் தீர்மானித்தேன். மேலும் மேலும் விசாரித்துப் பார்த்ததில் திரவியலாபம் கியாதி பிறர்மீது ஆக்ஞைசெலுத்தல் போன்றவைகளெல்லாம் வாழ்க்கையைச் சூழ்ந்து நிற்கும் புகைப்படலம் போல்வன வென்பதும், இவைதாம் பக்க பலங்களேயல்லாது இன்றியமையாத சாதனங்களேனும் உள்ளக் கருத்துக்களேனும் முடிபுகளேனும் ஆகா வென்பதும் புலனுயிற்று. ஒவ்வொருவனும் சுயநலச் சிந்தனையாற் கவரப்பட்டு உழலாமல், மனதை உலகாதிகளின் மீது பாரபக்ஷமில்லாமல் செலுத்தி அவைகளில் ஒன்றலே நன்மை. பிரபஞ்சாதிகளெல்லாம் தன்னந் தனிமையாய் நிற்பனவல்ல. இவ் வுலகாதிகளனைத்திலும் மனதைச் செலுத்தி, ஒன்றை ஏனையவைகளுடன் ஒத்திட்டுப் பார்ப்போமாயின், ஒன்றற்கொன்று ஆதாரமாகவும் சார்பாகவும் பரஸ்பர ஐக்கியம் பொருந்தியும் நிற்கின்ற தன்மை விளங்கும். நான் என்று ஓர்

தனிப்பொருள் இல்லை. நான் என்னும் அவ்வெண்ணமே வெறும் பொய். கருவிகள் பல, வடிவங்கள் கணக்கற்றன; ஆனால், ஆதிகாரணன் ஒருவனே, மூலசக்தி ஒன்றே,' என்ற பேருண்மைகளை அறிவோம். இவ்வறிவே மாந்தருலகில் நிலவி, கடும்போர் புரியும் ஒரு தலைச் சாதனைகள் தப்பபிப்பிராயங்கள் கபடம் மமதை உவப்புவெறுப்புக்கள் புலைமை விருப்பம் அவநம்பிக்கை அனையவைகளைக் காய்ந்தெரிக்க வல்லது."

இன்னமும், அஞ்சியழுங்கி நாணிப் பதுங்காமல், ஒவ்வொருவனும் தன் சுவபாவத்தையும் தனக்கான மர்மத்தையும் ஸ்பஷ்டமாக அறிந்து, நசையாமனம் வெருளாப்பண்பு விடாப் பேரன்புகளுடன் ஒட்டியநுசரித்தலும், துன்பமும் அடிமையும் நோவும் மிடியும் நீங்கி இடும்பைதீர்ந்து பொறையும் இன்பமுமுற்று அன்புடன் இணங்கி வாழ்தலே ஆன்மாவின் மெய்ச்சாதனமெனக்கொண்டு, இதற்கான நல்வழியைத் தானும் மற்றவர்களும் பற்றி உய்யும்பொருட்டுத் தத்வவிசாரணையில் தாம் புகுந்ததாக இவர் காட்டியிருக்கின்றார்.

இன்னமும், "மானுடன் பிரகிருதியின் ஓர் அம்சமாவான். ஆதலின், மனித இயல்பை அறியவேண்டுமானால், பிரகிருதி யமைப்பையும் போக்கையும், தராதரங்களையும் கசடற நாம் அறியவேண்டியது அவசியமாகும். தோற்றவுலகை விஸ்தரிப்பது பிரகிருதி சாஸ்திரம்; ஆன்மாவின் அகப்பான்மையையும் முடிபையும் உணர்த்துவது மூல தத்வசாஸ்திரம். பூரண நன்மை என்பது மாந்தருலகில்மாத்திரம் ஒளிர்வதன்று; இயற்கை உலகம் உலகாதிகளுள் எலலாம் அந் நன்மை விரவிநிற்கின்றது போலும். உண்மையில் இயற்கை உலகம் செயற்கைஉலகம் என இரண்டு உலகங்கள் இல்லை. சீர் அழகு நன்மை எனப்படுவது மாந்தருலகில் பிரகாசத்துடன் ஜவலிக்கின்றது; ஆனால், இயற்கை உலகிலோ மங்கலாகத் தோன்றுகின்றது".

இன்னமும், சுயநன்மை சுயப்பெருமை சுயச் சுக போகங்களுக்காகவே இந்த உலகமும் உலகாதிகளும் இருந்துவருவன என்றவொரு மூடக் கொள்கையே, தூஷணைபூஷணைகளுக்கும் தப்பபிப்பிராயங்களுக்கும் விளைநிலமாகின்றது என்பது இவர் கருத்து. இவ்விஷயத்தைப்பற்றி இவர் அடியில்வருமாறு விளக்கியிருக்கின்றார்:—

"உலகாதிகளின் காரணக் கருத்துக்களைப் பற்றிய அறிவுடன் மனிதன் ஜனிப்பதில்லை யானாலும், தனக்கு அநுகூலமானவைகளைத் தேடிப் பெறுதற்கான விருப்பவுணர்ச்சியை உடையவன் என்பது யாவரும் ஒப்பிய விஷயம். இவ்வுணர்ச்சியே ஒருவனைச் சுதந்தரி எனப் பாவிக்கச்செய்கின்றது. ஆனால், விருப்பங்களும் அவாக்களும் எவ்வாறு எழுகின்றன என்பதை ஒருவனும் நிதானித்து அறிகிறதில்லை. பயன் பலன் அல்லது முடிபை முன்னிட்டேதான் தொழில்களிற் பிரவிர்த்திப்பதினின்று ஒவ்வொரு பொருளுங் காரியமும் ஒவ்வோர் பயன் பலன் முடிபைத் தாங்கி, பற்பல வழிகளில் தன் விருப்பங்களையும் அவாக்களையும் பூர்த்திசெய்வதற்காகவே அவை இருந்துவருவனவெனக்கொண்டு, ஒவ்வொரு பொருளின் உபயோகத்தையும் நிகழ்ச்சியின் குணத்தையும் காரியத்தின் முடிபையும் உற்றறிதற்கு முயற்சிகள் செய்கையில், அவைகளைப் பற்றிப் பிறர்மூலமாக ஒருவாறு அறிகின்றான். அறிந்து வாழ்க்கைப் பயனை அறிந்துவிட்டதாகக் கருதி மேல் விசாரியாமல் நின்றுவிடுகின்றான். ஆனால் அவைகளைப் பிறர் மூலமாக அறியாதபொழுது, எப்பலன்களை முன்னிட்டுக் கருமமியற்றுகின்றானென்பதை அறிய உள்ளாராய்ச்சியிற்புகுகின்றான். ஏனையோர் சொல் செயல்களின் பொருளையும் முடிபையும் தன் உணர்ச்சி கற்பனாசக்தி அநுபவங்கள் வாயிலாக அநுமானிக்கின்றான்."

"தீர்க்கமான அகம்புற வாராய்ச்சிகளைச் செய்துபார்க்கையில், தின்பதற்குப் பற்களும், உண்டு இரமித்தற்குக் காய்கனி கிழங்குகளும், ஒளிபரப்பச் சூரியனும், தன் உணவுக்கான மீன்வகைகளைப் போஷித்துவளர்க்கக் கடலும் இருந்துவருவன என்று ஏமாந்து, இதுபோலவே, இயற்கை உலகமும் உலகாதிகளெல்லாமும் தான் போகந்துய்த்துக் களித்திருத்தற்காகவே உள்ளனவென முடிக்கின்றான்! எனினும், இயற்கைப் பொருள்களிலொன்றேனும் தன்னால் உண்டுபண்ணப்பட்டது அன்று என்பதை உணர்ந்து, மேன்மேல் ஆராய்கையில், தன்னுடைய சம்ரக்ஷணைக்காக அவைகள் தன்னைப்போன்ற ஒருவனால் சிருஷ்டித்துப்பரிபாலிக்கப்பட்டுவருவன எனப் பாவிக்கின்றான். தனக்கு வேண்டியவைகளை யடையும்பொருட்டுத் தன் அயலார்களுடன் எவ்வாறு பழகுகின்றானோ அவ்வாறே இயற்கைப் பொருள்களைப் பெற்றுச் சுகித்திருக்க அவைகளின் கர்த்தா அல்லது கர்த்தாக்களைத் தொழத் தலைப்படுகின்றான்!"

"அண்டபிண்ட சராசரங்களனைத்தையும் வெளிப்படுத்தி இயக்குவதும், சர்வத்திற்கும் காரணமாயும் உறைவிடமாயும் அந்தமாயும் விளங்குவதும் ஆன மூலவஸ்து எதை யெதனிற்காக இச்சித்து உழைக்கவேண்டுமோ, எக்குறையை எவ்வெண்ணத்தை நிறைவேற்றவேண்டுமோ என்றவைகளைப்பற்றிக் கிஞ்சித்தேனும் ஆய்ந்தோய்ந்து நிதானித்து அறிவதில்லை மூடஆன்மாக்கள்! மேற்சொல்லியபடி, வெற்றியையும் சந்தோஷத்தையும் போகாநுபவங்களையும் அளித்துப் பெருக்குபவைகளை நல்லன வெனவும், எழில் நிரம்பியன வெனவும், முரணானவைகளைத் தீமை குழப்பம் விரூபங்களெனவும் வேறுவேறு பெயரிட்டு உழல்கின்றான். மேலும், தான் ஓர் சுதந்திரி என்ற பிரேமையினின்று, புகழ்ச்சி யிகழ்ச்சி, பாவம் புண்ணியம் என்ற பலவகையான பாவனைகள் எழுகின்றன. அவலப் பிரேமையே புரைதீர் ஞானமென மருண்டு படுகின்றான். உலகாதிகளின் இருப்பையும் போக்கையும் புலன்கள் மூலமாக நாம் உணர்கின்றோம்; ஆனால், நன்மை தீமை, இணக்கம் பிணக்கம் எனப்பட்டவை யெல்லாம் நம்முடைய கருத்தின் பிரதிபிம்பங்களும் கற்பனாசக்தியின் உருக்களுமே என்ற விஷயத்தை அறிவதில்லை. உலக உலகாதிகளைப்பற்றி நாம் பிதற்றுவன வெல்லாம் மங்கியழிந்த பிரேமைகளின் வெறும் மருட் சொற்களே யல்லாது, உள்ளதை உள்ளவாறு உணர்த்தும் மொழிகளல்ல என்ற உண்மையை அறிவதில்லை!"

"ஒவ்வொன்றும் அவ்வதின் சக்தி அமைப்புக்களுக் கேற்றவாறு தோன்றி வளர்ந்து தேய்ந்து மறைகின்றது. வேம்பு கைப்பதும், தேன் தித்திப்பதும், கழுதை கழுதையாக சீவித்தலும், சிங்கம் காம்பீரியத்துடன் நடத்தலும் இயற்கையே. முன்னதைப் பின்னதுடன் ஒத்திட்டுப் பார்த்து, நம் மனக் கற்பனைகளான குணவேற்றுமைகளால் ஒன்றைச் சிலாகித்து மற்றதைத் தூஷித்தல் விவேகமாகாது. அகண்ட நிரந்தர பூரணசக்தி ததும்பப்பெற்ற பரம்பொருளின் வடிவமான பிரபஞ்சத்தில் குற்றங்குறைகள் எவ்வாறு இருக்கக் கூடும்? சிற்றறிவும் சிறுதொழிலு முடைய புன்மாக்களான நம்முள்ளேயே குறைபுங் குற்றமும் இருந்துவருவனபோலும். ஒவ்வொரு ஜீவனும், காம வெகுளி மயக்கங்களால் பீடிக்கப்படாமல் தூய மனத்துடன் உள்ளவைகளை உள்ளவாறு கிரஹிக்கவேண்டும். குறுகிய நோக்கத்தால் குறுகிய தொழில்களில் தலையிட்டு அலக்கணுறும் பேதையர்களை நல்வழியில் திருத்தி அன்னார் உயர்ந்து உய்யும்படி உதவவேண்டியது ஞானிகள் கடனாகும்.

இன்னவைகளே இவருடைய தத்துவத்தின் முக்கிய அம்சங்களிற் சில. இவருடைய சித்தாந்தங்களை இனி விரிப்போம்.

ஜூலியஸ் ஸீஸர்

[ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[393-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 3. களம் 1.

ப்ரூட்டஸ்:—அவ்வாறே செய்க, மார்க் ஆண்டனி. (1)

காஸ்ஸியஸ்:—ப்ரூட்டஸ், உனக்கொரு வார்த்தை (2)—யாது நீ செய்கின்றனை என்பதை அறிந்திலை. இவனது ஈமச்சடங்கில் ஆண்டனி பேசுவதற்கு நீ ஒவ்வாதே. அவன் வழங்குபவைகளாற் சனங்கள் எவ்வளவு அசையலா மென்பதை அறிகின்றாயோ நீ (3).

[ப்ரூட்டஸுடன் ஒரு புறமாய்ப் பேசுகின்றான்]

ப்ரூட்டஸ்:—என்னை நீ மன்னிக்கவேண்டும் (4)—நானே முதலில் மேடையேறி, நம் ஸீஸரின் சாவிற்குக் காரணங் காட்டுவேன். ஆண்டனி பேசுவதவ்வளவும் அனுமதியாற் பேசுகின்றானென்பதை வற்புறுத்துவேன். உண்மைச்சடங்குகளும் நியாயமான கருமங்களும் எல்லாம் ஸீஸர் அடையவேண்டுமென நாம் சம்மதித்திருக்கின்றோ மென்பதையும் தெரிவிப்பேன். இதனால் நமக்குத் தீதிலும் நன்மையே மிகுதியாய் விளையும். (5)

காஸ்ஸியஸ்:—யாது விளையுமோ யானறியேன்; எனக்கிது ஒவ்வவில்லை. (6)

ப்ரூட்டஸ்:—மார்க் ஆண்டனி, இதோ, ஸீஸரின் உடலத்தை நீ எடுத்துக்கொள். இவ் வீமப் பிரசங்கத்தில் எங்களை நீ பழித்தலாகாது; மற்று, ஸீஸரின் நலங்களை உன்னா லியன்றவளவு நீ புனைந்து பேசலாம். எங்கள் அநுமதியில் இது செய்கின்றா யென்பதையுஞ்சொல். இல்லையேல், இவன் ஈமச்சடங்குகளில் நீ கையொன்றும் வைக்கவொண்ணாது காண். அன்றியும் யான் போகின்ற மேடையிலிருந்தே, என் பேச்சுமுடிந்தபின் நீ பேசுதல் வேண்டும். (7)

ஆண்டனி:—அவ்வாறே ஆகுக. நான் மேலொன்றும் விழைபவில்லை. (8)

ப்ரூட்டஸ்:—எனின், பிரேதத்திற் குரியனசெய்து எம்பின் வந்துசேர்.

[ஆண்டனி தவிர ஏனையோர் போகின்றனர்.]

ஆண்டனி:—இந்தப் படுகொலையாளர்பால் அடங்கி யான் சாந்தமாயிருப்பதற்கு முனியாமல் என்னை நீ, ஓ குருதி சொரி மண்ணே, மன்னித்தருள்க (9). காலப்பெருக்கில் இதுகாறும் வாழ்ந்திருந்த யாவரினும் பெருமைமிகு மொருதனி மனிதன்றன் சிதைவு நீ, (10). விலையரிய இவ்விரத்தத்தைச் சிந்

(1) ஈமச்சடங்கில் ஆண்டனி பேசுவதற்கு ப்ரூட்டஸ், முன்பின் யோசியாமல் அநுமதி அளிக்கின்றான். சூழ்ச்சியின் கூர்மை மிகுந்த காஸ்ஸியஸ் இதற்கு மிகவும் அஞ்சி ப்ரூட்டஸைத் தடுக்கின்றான்.

2) "உன்னோடு ஒருவார்த்தை இரகசியமாகப் பேசவேண்டியிருக்கின்றது" என்று சொல்லிக் காஸ்ஸியஸ் ப்ரூட்டஸை ஒருபுறம் அழைத்துச் செல்கின்றான்.

(3) ஜனங்கள் அசைதலென்பது, "ஆண்டனியின் சொற்களுக்கு வசமாகி அவன்பக்கம் சாய்வது" என்னும் பொருளைக் குறிக்கின்றது.

(4) "நீ சொல்வதை" ஏற்றுக்கொள்ளமாட்டேன், என் இஷ்டப்படியேதான் செய்வேன்; உன்னளவு அறிவு எனக்கும் இருக்கின்றது" என்றுரைப்பதற்குப்பதிலாய், "என்னை நீ மன்னிக்க வேண்டும்" எனப் போலிப்பரிவுடன் மறுப்பது ஆங்கிலவழக்கின் மரபு.

(5) ஆண்டனி கேட்டதும் ஆமென்றுரைத்துவிட்டுப் பிறகு ப்ரூட்டஸ் சொல்கின்ற சமாதானம் இவை. ஆண்டனியையும் கொன்றுவிடவேண்டும் என்று முன் காஸ்ஸியஸ் தூண்டியபோது, தங்களுடையகாரியம் கொடியதாய்த் தோன்றப்படாதென்றே அவனைக்கொல்லமறுத்ததுபோல், ப்ரூட்டஸ், இவ்விடத்தும், பொதுஜனங்களின் நன்மதிப்பைப் பெறுவதற்கே ஆண்டனி பேசுவதற்கு அநுமதி தருகின்றான்.

(6) இது, ப்ரூட்டஸினிடத்தில் காஸ்ஸியஸ் அடைந்த மூன்றாவது தோல்வி. காஸ்ஸியஸின் கருத்தை ப்ரூட்டஸ் ஏற்றுக்கொண் டிருப்பானாயின், ஸீஸரைக் கொன்றதால் பெறநினைத்த இலாபத்தை ஒருகால் அடைந்திருக்கலாம். ஆனால், ஸீஸரின்பால் பொறாமையால் அவனை அழிப்பதற்குப் புகுந்த காஸ்ஸியஸ் ஒரு கட்சிசேர்த்து அக்கட்சிக்கு ஓர் தலைவனையும் தேடியமைத்தான். அதன்பயனை அவன் அனுபவிக்கவேண்டியதும் இயற்கையே.

(7) இவைகளெல்லாம், ஆண்டனியைப் பேசவிடுவதால் தமக்கொன்றும் ஆபத்து நேராவண்ணம் காத்துக்கொள்வதற்கு ப்ரூட்டஸ் செய்கின்ற முன்னேற்பாடுகள். இவைகளுக்குஅடங்கியே ஆண்டனி தன் காரியத்தைச் சாதித்துக்கொள்கின்ற திறமையுடையவனென்பது சிறிது பின்னர் வெளிப்படும்.

(8) இவ்வளவேனும் அநுமதி தனக்குக் கொடுத்ததற்கே வியக்கின்ற ஆண்டனி, "இது போதும், இதனைக் கொண்டே என்கருத்தை முடித்துவைக்க வல்லேன்" என்பான் போல் இயம்புகின்றான்.

(9) ஸீஸரின் சவத்தைப் பார்த்துச் சொல்வது இது. முனியாமல் - கோபிக்காமல். உடலை மண்பாண்டமென அழைப்பது மரபு. உன்னைக் கொன்றவர்களுடன் நான் உறவு கொண்டாடுவதுபோல் விவகரிக்கின்ற என்னை மன்னித்தருள் - என்பது பொருள்.

188969

திய கைகள் கெடுக. நின்புண்களுக்கெதிரில் இப்பொழு திதனையான் முன்னுரைக்கின்றேன் (11). அவைதாம், என் நாவின் ஒலியையும் மொழியையும் இரந்துவேண்ட ஊமைவாய்களென்னத் தம் மாணிக்க உதடுகளைத் திறக்கின்றன (12)—மனிதரவயவங்களில் அருங்கேடு வீழட்டும். இட்டலிதேயத்தின் எவ்விடத்தும் கடுஞ்சினமும் உட்கலகமுஞ் சூழட்டும். சண்டைக்கைகளால் தம் பாலகர் நாலுகூறுகக்கண்டும் தாய்மார் புன்னகை புரியும் வண்ணம், உதிரமும் அழிவும் வழங்குவதாகுக; பயங்கரமானவைகளெல்லாம் சாதாரணச் செய்திகளாகுக (13) பாதகக்கொடுஞ் செய்கைகளின் பழக்கத்தால் இரக்கமென்பதெல்லாம் மூச்சடைத்துப் போகட்டும். (14). ஸீஸரின் ஆவி, நீடுவெம் நிரயத்திருந்து வந்த ஏட் (15) என்னுந் தெய்வத்தைத் தன்னருகுகொண்டு பழிக்குப் பழிதேடி அலைந்து திரிவதாகி, தன் அரசஆக்ஞையில் "படுநாசமாகுக" என முழங்கிச் சமரநாய்களை அவிழ்த்து விடட்டும். புதைப்போருமின்றி மறுகுகின்ற மனிதப்பிணங்களின் நாற்றமொடு இந்தக் கொடிய காரியம் (16) பூமிக்கு மேலெழுந்து வீசட்டும்.

[ஓர் வேலையாள் வருகின்றான்]

நீ ஆக்டேவியஸ் ஸீஸரிற்கு ஆட்செய்கின்றாய் அல்லையோ? (17)

வேலையாள்:—ஆம், மார்க் ஆண்டனி.

ஆண்டனி:—உரோமிற்கு வரும்படி ஸீஸர் அவனுக்கு எழுதியிருந்தான்.

வேலையாள்:—அவன் கடிதங்களைப் பெற்றனன். வருகின்றான். உனக்கு யான் மொழியும்படி—(8) ஓ! ஸீஸர்!

ஆண்டனி:—உன்னிதயம் பெரியது, விலகிச் சென்று நீ அழுக. துயரம் தொத்திக்கொள்ளுந் தன்மைத்தென்பதைக் காண்கின்றேன்; துயரத்தின் மணிகள் (9) உன் கண்களில் நிற்கக்கண்டு என் கண்களும் நீர்சொரியத் தலைப்படுகின்றன (2) உன் தலைவன் வருகின்றானோ?

வேலையாள்:—இன்றிரவு அவன் ஏழு காத தூரத்தில் தங்கியிருக்கின்றான்.

ஆண்டனி:—விரைவுடன் மீண்டுசென்றிங்குநிகழ்ந்ததை அவனுக்குச் சொல். துயர்கூர் உரோமாபுரி; ஆபத்திற் கிடமான உரோமாபுரி; ஆக்டேவியஸின் சேமத்திற் கிப்பொழுது அமையாத உரோமாபுரி இதுவாயிருக்கின்றது (21). விரைந்தேகி அவனுக்கு இதனைச்சொல். இரு, இரு, சிறிது இங்கிரு (22); இந்தச் சவத்தை யான் கடைத்தெருமருங்கு சுமந்துசெல்லுமளவும் நீ மீண்டேக வேண்டா. இந்த இரத்தவெறி கொண்டவர்களின் (23) கொடிய செய்கையைச் சனங்கள் எவ்வண்ணம் ஏற்றுக்கொள்கின்றார்களென்பதை அங்கு என் பிரசங்கத்திற் சோதிப்பேன். அதன் முடிவிற்குத் தக்கபடி நீ இள ஆக்டேவியஸிற்கு விடயங்கள் இருக்கும் நிலைமையைப்பற்றி எடுத்துப் பேசலாம். (24) ஒரு கை கொடு (25)

[ஸீஸரின் உடலைத் தூக்கிக்கொண்டு போகிறார்கள்]

(10) என்றென்றும் எக்காலத்திலும் இருந்த மனிதர்களிலெல்லாம மிகவுயர்ந்த பெருமைவாய்ந்த நீயோ இப்படிச் சிதைந்து கிடக்கின்றாய் - என்பது பொருள்.

(11) ஸீஸரின் புண்களை சாக்ஷியாக ஆண்டனி சாபமிடத் தலைப்படுகின்றான்.

(12) அவைதாம் - அப் புண்கள்தாம். ஸீஸரின் உடல் கிழிந்து உண்டாய புண்கள் வாய்கள் போன்றும், அவை பேசமாட்டாமையால் ஊமைவாய்களென்றும் கூறப்பட்டன. அவ்வாய்கள் தம் சிவந்த உதடுகளைத் திறந்து "ஆண்டனி நீயும் அப்பாதகர்களுடன் நட்புக்கொள்ளலாமோ, இது உண்மையோ, மற்றோர் தந்திரமோ! உன் எண்ணமுஞ் செயலும் எவ்வகை நிகழும் என்று இயம்பாயோ" என்று தன்னை இரந்து வேண்டுவனபோல் தோன்றுகின்றன என்கின்றான். இது தற்குறிப்பேற்றவணி.

(13) கலகப்போர்களின் கொடுமைகள் எல்லாம எங்கெங்கும் மிகுதியாக நிகழவே, சனங்கள் இவைகளைக் கண்டுகண்டு பழகியயனங்கள் மரத்துப்போய், தம் மகவு கொலையுண்ணக் கண்டும் தாயானவள் சிரிக்கும்படி அவ்வளவு கொடியதோர் நிலை வந்து சனங்களை அடையட்டும் என்று ஆண்டனி சபிக்கின்றான்.

(14) பாதகங்கள் செய்துசெய்து பழகியதால் ஜனங்களுக்கு இரக்கமென்பதே எழுவதின்றி அழியட்டும்- என்பது பொருள்.

(15) ஏட் என்பது கிரேக்கியர் தெய்வங்களில்ஒன்று. ஜனங்களையும் தேவர்களையும் அடாத செய்கைகளைச் செய்யும்படி தூண்டுவதே இதன் கருமம் என்றும், மற்று அவ்வாறு செய்கின்றவர்களைத் தண்டிக்குங் கடவுள் இதுவென்றும் இருவகையிலும் அந்நாட்டுப் புராணங்கள் கூறும். பின்னைய கருத்தில்தான் ஷேக்ஸ்பியர் அத்தெய்வத்தை இங்குக் கையாள்கின்றார்.

(16) கொடிய கருமம் - ஸீஸரின் கொலை.

(17) ஆக்டேவியஸ் ஸீஸர், என்பவன் ஜூலியஸ் ஸீஸரின் உறவினன்.

(18) ஆக்டேவியஸ் ஸீஸர் சொல்லியனுப்பிய செய்தியை ஆண்டனிக்குச் சொல்ல வாயெடுக்கும்போது ஸீஸரின் சவத்தைக் கண்டு திடுக்கிடுகின்றான்.

(19) துயரத்தின் மணி—கண்ணீர்த்துளி.

(20) நீ அழுவதைக்காண எனக்கும் அழுகைவருகின்றது; ஆகையால் அகன்று சென்று அழுக...என்கின்றான். உன் இதயம் பெரியது, நீ அதிகம் இரக்க முடையவன்.

(21) ஜூலியஸ் ஸீஸரின் உறவினனாகிய ஆக்டேவியஸ் இப்பொழுது உரோமிற்குள் வருவானாயின் அவனுக்கும் ஆபத்து நேரக்கூடும் என்பது பொருள்.

(22) ஆண்டனிசொன்னபடியே புறப்பட்ட ஏவலாளனை நிறுத்திக்கொண்டு, மேல்நிகழ்வனவற்றையும் கண்டறிந்து அவைகளையும் ஆக்டேவியஸினிடம் சொல்லும்படி கூறுகின்றான்.

(23) இரத்தவெறி கொண்டவர்கள்—ப்ரூட்டஸ் காஸ்ஸியஸ் முதலிய சதியாளர்.

(24) தான் செய்யஇருக்கும் பிரசங்கத்தால் சனங்கள் தன்வசமாகின்றார்களா என்று பார்த்து, ஜனங்கள் இணங்குவார்களாயின். ஆக்டேவியஸ் பயமின்றி வரலாமென்றும், இணங்காராயின் பின் அந்நிலைக்கு ஏற்றபடி செய்யத்தகுவனவற்றை ஆலோசித்துப் பேசலாமென்றும்கூறுகின்றான்.

(25) ஒரு கை கொடு, என்றது, ஸீஸரின் சவத்தைத் தூக்கிச் செல்வதற்கு.

அங்கம் 3. களம் 1. முற்றிற்று.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[386-வது பக்கத் தொடர்ச்சி]

2-ம் பத்து—10-ம் தசகம்.

7-ம் பாசுரம்.

நலமென நினைமி னரகழுந் தாதே
நிலமுன மிடந்தா னீடுறை கோயில்
மலமறு மதிசேர் மாலிருஞ் சோலை
வலமுறை யெய்தி மருவுதல் வலமே.

குறிப்புக்கள்:-ஆழ்வார், ஞானயோகத்திற் சேர்ப்பிக்கும் கர்மயோகக் கவடுகளை ஒன்றுஒன்றாகக் கற்பிக்கின்றார். திருக்கோயிலை அடுத்துச் செல். அதன்கண் நித்தியவாஸம் செய்யும் எம்பெருமான் பரமஉபாயம். உனக்கு அவனல்லது பிராப்பியமில்லை, என்றார். இதன் பிறகு அவனை ஸதா தியானம்செய். தியானம் நிலைநிற்பதற்குத் திருக்கோயிலை வலஞ்செய், என்கிறார்.

வேறொன்றைப் பிராப்பியமாக நினையாதே; மூன்று லோகங்களையு மளந்தவன் இத் திருமலையைத் தனக்குத் திவ்விய ஸ்தலமாக அமர்த்திக்கொண்டான்! ஆகையால் இந்தமலையே திவ்விய நிர்மல ஞானத்துக்கு ஹேதுவாகுமென்ற நினைவுடன் வலஞ்செய்து மருவுங்கோள்.

—

8-ம் பாசுரம்.

வலஞ்செய்து வைகல் வலங்கழி யாதே
வலஞ்செய்யு மாய மாயவன் கோயில்
வலஞ்செய்யும் வானோர் மாலிருஞ் சோலை
வலஞ்செய்து நாளு மருவுதல் வழக்கே.

அருமருந்தன்ன சக்தியை அல்ப விஷயங்களில் செலவு செய்யாதே. ஆச்சரிய ரதனாய் ஆச்ரித சுலபனாயிருக்கின்ற எம்பெருமான் உறைவதும், அயர்வறும் அமரர்களும்கூட வலம்செய்துகொண்டு அநுபவிக்கின்றதுமான இத்திருமாலிருஞ்சோலை மலையை வலம்வந்து நாளும் அடுத்துப் பூஜைசெய்வது நியாயம்.

—

9-ம் பாசுரம்.

வழக்கென நினைமின் வல்வினை மூழ்கா
தழக்கொடி யட்டா னமர்பெருங் கோயில்
மழக்களிற் றினஞ்சேர் மாலிருஞ் சோலை
தொழக்கரு துவதே துணிவது சூதே.

குறிப்புக்கள்:—அழக்கொடி-பிசாசுப் பெண்ணாகிய பூதனையை, அட்டான் - கொன்றவன். பூதனையால் கிருஷ்ணபகவானுக்கு என்னதீங்குகள் நேரிடுமோ வென்று பயப்படும் வஸுதேவர் முதலான ஆச்ரிதர் பயத்தைத் தீர்ப்பதற்காக ஸம்ஹரித்தான். சூதே - சூழ்ச்சியே.

திருடமான பாபத்திலே இழுத்துச் செல்லுகின்ற விஷயாந்திர உருசிகளில் அகப்படாமல் திருமலையே பிராப்பியமாகப் பற்றி இருங்கோள். அம்மலையைத் தனக்குகந்த ஸ்திரவாசமாகக் கொண்டு எம்பெருமான் ஆச்ரிதர்கள் தொழ நின்றிருக்கின்றானென்று உங்கள் மனதில் விசுவாஸ பூரணமான திருடமன நிச்சயம் செய்து பற்றுங்கோள்; இது உத்தமமான சூழ்ச்சி.

10-ம் பாசுரம்.

சூதென்று களவுஞ் சூதுஞ் செய்யாதே
வேதமுன் விரித்தான் விரும்பிய கோயில்
மாதுறு மயில்சேர் மாலிருஞ் சோலைப்
போதவிழ் மலையே புகுவது பொருளே.

பதக்குறிப்பு:—மாதுறுமயில் - ஆணும் பெண்ணுமாய்ச் சேர்ந்து விளையாடும் மயில்கள்.

பகவானை வழிபடுதல் தொடங்கி,மனதில் கள்ளமும் சூதும் செய்தால் வழிபடுதலாகிய தபசு நசித்துப்போகும். ஆதலால் நன்மனதாய்ப் பக்திசெய்ய வேண்டுமென்கிறார்.

"புருஷார்த்த ரூபமான செயலைச் செய்கின்றோமென்று நன்கு மதித்துக்கொண்டு களவு சூதுகள் செய்யாமல், ஸர்வ வேதங்களுக்கும் தானே பிரதிபாத்தியன் என்னு மிடத்தை ஸ்ரீகீதையிலே அருளிச்செய்த அந்த மஹா குணத்தையுடைய எம்பெருமான் தனக்கும் இஷ்டஸுகரூபமான திருமலையிலே போய் உட்புகுவதுவே பெரிய புருஷார்த்த மென்கிறார்"—ஆறாயிரப்படி.

விசேஷக் குறிப்பு:—இப்பாசுரம் ஈசாவாஸிய உபநிஷத்தின் முதல் ரிக்கின் அர்த்தத்தைத் தமிழ்ப் படுத்தியதுபோல் காணுகிறது.

11-ம் பாசுரம்.

பொருளென் றிவ்வுலகம் படைத்தவன் புகழ்மேல்
மருளில் வண்குருகூர்ச்சட கோபன்
தெருள்கொள்ளச் சொன்ன வோராயிரத் துளிப்பத்
தருளுடைய வன்றா ளணைவிக்கு முடித்தே.

"ஸம்ஸாரிகளுக்குக் கரணகளேபரங்களைக் கொடுத்து இவர்கள் தன்னை எந்தவொரு ஜன்மத்திலும் வழிபட்டுத்தேறிப் புருஷார்த்தமடையட்டுமென்று அவர்களின் பிரயோஜநமே தனக்குங்கூட உத்தேசியம் என்கிற கருத்தாலே ஜகத்சிருஷ்டி செய்தவன் குணங்களில் கொஞ்சம்கூட தத்துவக் கலக்க மில்லாமலிருக்கும் குருகூர்ச் சடகோபன், எல்லாருக்கும் எம்பெருமானைக் கண்டாற்போல அறியவாம்படி சொன்ன இப்பத்தும் அழகர் திருவடிகளிலே சேர்வித்து முடிக்குமென்கிறார்"—ஆறாயிரப்படி.

விசேஷக் குறிப்பு:—இப்பத்துப் பாசுரங்களால்,—பகவானை ஆச்ரயிப்பதற்குவேண்டிய இடம் பொருள் ஏவல் என்ற ஸாதனங்களில் அவன் எல்லா விடங்களிலும் இருப்பவனானாலும், பக்தர் பூஜைசெய்வதற்கு, அவனுக்குங்கூட உகப்பாயிருக்கும் திவ்விய ஸ்தலம் ஒன்று அவசியமென்றும், அழகர் திருமலைதன் அழகாலும் குளிர்ச்சியாலும் மான் மயில் முதலான சிறந்தபிராணிகள் உற்சாகப்பட்டு வஸிக்குமிடமாகையாலும் தவஞ்செய்யத் தகுந்த இடமென்றும், மனப்பரிசுத்தம்போலவே, இந்த ஸ்தல விசேஷமும் தபசிற்கு இன்றியமையாததென்றும் கற்பிக்கிறார்.

விசேஷக் குறிப்புகள்:-இந்த 2-ம் பத்தில், ஸ்ரீயப்பதி பக்தர்கள் அவனைப் பஜிக்கையிலும், பின் வைகுந்தம் சென்றபிறகு அவனை, அநுபவிக்கையிலும் அவனுக்குக் கைங்கரியங்கள் செய்கையிலும், சுகரூபமாயும்

இன்பரஸத்தை ஆநந்தத்தோடு நுகர்வதாலும் வெகு போக்கியதை யுள்ளவனென்றும் ஆழ்வார் ஸ்தாபித்தார். இந்தச் தசகத்தின் ஒவ்வொரு பதிகங்களின் கருத்துகளையும் முதல்பத்தின் ஸங்காஹம் எழுதிய பின்னர் விரித்துரைப்போம்.

முதல் பத்தில், பகவான் ஸர்வோத்கிருஷ்டனுகையாலும், எல்லாருக்கும் சமானமாய் ஒன்றுபோலே ஸ்வாமியானபடியாலும், பக்தர்களுக்கு மிகவும் ஸுலபனுகையாலும், ஸகல அபராதங்களையும் கண்ணேட்டஞ்செய்து பொறுத்துக்கொள்ளுபவன் ஆனதாலும், மிகத் தாழ்ந்தவர்கள் உத்கிருஷ்டர் இவர்களிடத்தில் வாசியற ஓரே மாதிரி கலப்பவனுதலாலும் ஸுலபமாய் ஆராதிக்கக் கூடியவன் ஆனதாலும், அவனைவழிபடும் உபாஸனைகளைப் பக்தர்களுக்கு இன்பரூபமாக்கித் தருகிறவன் ஆனதாலும் நித்திய ஸூரிகளுக்கும் ஸம்ஸாரிகளுக்கும் கூச்சமற்று அனுக ஆர்ஜவ ஸ்வபாவமுடையவன் ஆதலாலும், தன்னுடைய அநுபவத்தில் திருப்தி வந்து ஆழஆழக் கொஞ்சம்கொஞ்சமாய்த் தருபவனுகையாலும், ஒருவரின் வேண்டுகோள் இல்லாமல்மிகவும் உதாரஞ்செய்பவனுகையாலும் அவனே ஸேவிக்க போக்கியனென்று ஸம்பிரகாரமாய் அருளிச்செய்தார்.

இவ் விரண்டாம்பத்தில், எம்பெருமான் யோக்கியன் என்று ஸ்தாபித்தார் என்று சற்றுமுன் சொன்னேம். அதின் கவடுகளாவன:—ஒருக்ஷண மாத்திரமும் பகவானின் அநுபவவியோகம் பொறுக்க முடியாதென்றும், மனுஷ ஜாதியாய் அவன் அவதரித்தாலும் தன் ஸர்வோத்கிருஷ்டத்தை விடாமல் மஹிமை குன்றுதிருப்பவன் ஆனதாலும், மதுரமான வஸ்துக்கள் ஒன்றுசேர்ந்தாப்போலே வெகு போக்கியதையுடையவன் ஆனதாலும், ஆச்ரிதருடைய துக்கத்தைப் போக்கடிக்கக் கூடியவனுகையாலும், ஆச்ரிதருடன் கலவியைப் பிரீதியோடு எதிர்பார்க்கும் ஸ்வபாவனுகையாலும், அவர்கள் தன்னை விட்டால் என்செய்வது என்று நினைப்பவனுகையாலும், ஆச்ரிதர்களின் சம்பந்தம் பெற்றவர்களையும் ரக்ஷிக்கும் ஸ்வபாவனுகையாலும், மோக்ஷத்தில் ஆநந்தத்தைக் கொடுப்பவனுகையாலும், கைங்கரியத்துக்கு உத்தேசியன் ஆனபடியாலும், ஆசிரதர்கள் தன்னை யடையச் சுலபமான ஸ்தானத்தில் தான் கோயில்கொண்டு ஆராத்தியனு யிருப்பதாலும், பகவான் இன்பரஸமான பிராப்பியவஸ்துவென்று அருளிச்செய்தார். இப்படி உபாயவஸ்துவாயும் ஸுகரூபமான பிராப்பியவஸ்துவாயும் அமைவது வானுட்டில் வீற்றிருந்து செங்கோல் செலுத்தும் அப்பிராகிருத திவ்விய மங்கள விக்கிரகத்துக்கே உரித்தென்றுமூன்ருவது தசகத்தில்உபதேசிக்கிருர். அதன் முதல்பாசுரத்திலேயே இக்கருத்துத் தோன்ற அவனது திவ்விய ஸௌந்திரியத்தையும் அஸாதாரண தேஜஸையும் வர்ணிக்கத் தொடங்குகின்ருர்.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—5. சூர்ப்பணகைப் படலம்.

[397-வது பக்கத் தொடர்ச்சி]

ஒருநிலை யொருமொழி யுரைப்ப துண்மையே.

உளமருவு காத லதுவாயின் ஊமையா யுறைந்திருக்கும். மற்று, மெய்வரு போகமே மேவினுளிச் சழக்கியாதலின், மென்மொழிகள் பலபயில்தற்கியன்ற வளுமாயினுள். "என்பால் என்னை காரியத்தை, இயம்புதி" என்று ஏவிய அழகனைக் குழைந் தொருமுறை நோக்கியபின், நாணத்தின் பாரத்தால் நிற்கமாட்டாதவள்போல் இக் காமவல்லி அரிதின் நடுங்கிச் சிரங் குனிந்து, முன்றுனையைத் தன் மெல்லிய விரல்களால் பின்னினளாய்,

தாமுறு காமத் தன்மை
    தாங்களே யுரைப்ப தென்ப
தாமெனி லாவ தன்று
    லருங்குல மகளிர்க் கம்மா
ஏமுறு முயிர்க்கு நோவே
    னென்செய்கேன் யாரு மில்லேன்
காமனென் றொருவன் செய்யும்
    வன்மையைக் காத்தி யென்றுள்

[தாங்கள் அடைந்த காமத்தின் தன்மையைத் தாங்களே சொல்வதென்பது முடியுமோ என்றுலோ, உயர்குலத்தில் பிறந்த மாதர்களுக்கு அது முடிவதில்லையே. இந்நிலையில் உயிர்தளர்ந்து வருந்துகின்றேன். ஐயோ, என் செய்வேன் யான்! எனக்குத் துணைசெய்ய ஒருவருமில்லாத் தமியளாயிருக்கின்றேன். நீயே தஞ்சம். மன்மதன் என்று ஒருவன் செய்கின்ற கொடுமையினின்று நீ என்னை இன்று காத்தருளவேண்டும்—என்றுள்]

"இராமரே, நான் தங்களைக் கண்டமாத்திரத்தில் தாங்கள் எனக்குப் புருஷனுகவேண்டுமென்று எண்ணங்கொண்டு தங்களிடம் வந்திருக்கின்றேன். என்றென்றைக்கும் என் கணவராகத் தாங்கள் ஆகவேண்டும். நான்தான் தங்களுக்கு ஏற்ற மனைவி. ஆகையால், நீங்கள் என்னை மனைவியாக ஏற்றுக்கொள்ளுங்கள். சீதையை ஒருவாயாய்ப் புசித்துவிட்டுப் பிறகு சக்களத்தி பயமின்றி நான் தங்களுடன்கூடச் சுகமாக வசிக்கின்றேன்" என்று வான்மீகத்தில், தான் வந்தகாரியத்தை நேரே உரைத்துக் காதல்செய்த சூர்ப்பணகைஇங்குத் தமிழைத் தழுவியவுடன் அமிழ்தம்போற் பேச ஆரம்பித்துவிட்டாள். உருவமும் உரையுமன்றி நெஞ்சிலும் இவ்விரு சூர்ப்பணகைகளுக்கிடையே ஆழ்ந்ததோர் வேற்றுமையுளது. அங்கு அவ்வடமொழிச்சழக்கியாதும் வஞ்சனையின்றித் தான்வேண்டியதை வேண்டியாங்கு எய்துதற்குச் செய்தவம்போல் செப்பலுற்ருள். இங்குவந்த அரக்கி வேட்கையில் குறைபாதவளாவதோடு வஞ்சனையொன்றும் தாங்கிய நெஞ்சினளாய்த் தோன்றினுள். அவ் வஞ்சனைக்கேற்ப நல்லுருவும் மென்மொழியும் பூண்டனள். இதுவே பண்டைக்காலக் "காட்டு மிராண்டிகளுக்கும்" தற்கால "நாகரிக மக்களுக்கும்" உள்ள வேற்றுமை.

இன்னதோர் வஞ்சமகளாய சூர்ப்பணகை அடக்கமாட்டா நாணத்தால் அனுங்குவாள்போல், "தாமுறு காமத்தன்மை தாங்களே உரைப்பதென்பது ஆமெனில் ஆவதன்றுல் அருங்குலமகளிர்க்கு" என்று சூழ்ந்து

சொல்லிய பரிசினைப் பரிகசிக்கவே, பின்னர், பாரதத்தில், இவளேபோன் ருேர்வீரனைக் காமுற்றுக் கலவிசெய் கருத்தினளாய்க் கலங்கிய வேருெரு சழக்கியாம் இடிம்பை, வாயுவின் பெருவலி மதலையாம் அவ் வீமசேனனை அண்மி,

எம்முனேவலால் யான்மலைந்திடற்
    கெய்தினேனினைக் கொன்றுமென்பயன்
அம்மவெற்பிரண் டனையபொற்புயத்
    தழகெறிக்குநீ டாரமார்பகேள்
கொம்மைவெம்முலைத் தெரிவையர்க்குளங்
    கூசுமாசைநோய் கூறுகிற்பதென்
றெம்மனேர்களுஞ் சொல்வர்யானுனக்
    கெங்ஙனேகொலா மிறுதிகூறுகேன்

[என் தமையனுகிய இடிம்பனது ஏவலால் உன்னைக் கொல்வதற்கென்று வந்தேன். ஆயினும் உன்னைக் கொல்வதால் என்னபயன். மலைகள் இரண்டனைய அழகிய புயத்தின் அழகினை விளங்கவீசும் மாலையயணிந்த மார்பையுடையவனே, கேள்—பருத்த விருப்பத்தை ஊட்டுகின்ற முலைகளையுடைய மாதர்களுக்கு, அவர் தம்முடைய ஆசைநோயைக் கூறுவதற்கு, உள்ளம் கூசும் என்று என்போன்றவர்களும் சொல்லியிருக்கின்றனர். ஆதலால் யான் எப்படி என்னுடைய கருத்தின் முடிவை உன்னிடம் கூறவல்லவள் ஆவேன்]

என விளம்பினுளென் றெண்ணுதற்குச் சாலவும் இடமுளது. கம்பர்தம் சூர்ப்பணகையின் இச்சொற்களை மனத்துள் வைத்தே வில்லிபுத்தூராரும் தம் இடிம்பையை இவ்வண்ணம் இயம்பச்செய்தார். "என்போன்ற அரக்கியர்களும், 'ஆசைநோய் கூறுகிற்பது உளம் கூசும், என்று சொல்வர்" என்னுங்கால் அவ் விழிவு சிறப்பும்மையால் இடிம்பை சூர்ப்பணகையின் சொற்களை இளிவரப் படித்துரைக்கின்ருள். இவ்வண்ணம் சூர்ப்பணகைக்கோர் போலிமாணவியாய்ப் புகநினைந்த இடிம்பையைக் கற்பித்த வில்லிபுத்தூரரோ கம்பருக்குச் சீடராகமாட்டாமல், வான்மீகமுனிவர்தம் மரபிற்கொக்க அவளை,

செவ்வனத்திகழ்க் கூரெயிற்றெழுந்
    தெண்ணிலாவினிற் றிமிரமாறவே
வெவ்வனற்சுடர்க் கொத்தவோதியாள்
    வீமசேனனே டுரைவிளம்பினுள்

என அரக்கியினுருவத்தை மறைக்காமற் கொணர்ந்ததுமன்றி, "என்னை மனைவியாக ஒப்புக்கொள்ளுங்கள்; அதன் பிறகு, என் கணவரே, அநேக மலைகளின் சிகரங்களையும் அநேக அரணியங்களையும் என்னுடன் கூடப் பார்த்துக்கொண்டு தாங்கள் சுகமாகச் சஞ்சரிக்கலாம்," எனத் தன் காதலின்வரும் இனிய ஊதியம் பேசிய அவ் வடநூற் சூர்ப்பணகை போன்றே இவ்விடிம்பையையும்,

நாடியென்கொல்மற் றுய்ந்துபோகலா
    நம்பியென்னைநீ நலனுறத்தழீஇக்
கோடிபம்பரத் திடையெழுந்துனைக்
    கொண்டுபோவலோர் குன்றிலென்னவே

இயம்பவைக்கின்ருர். ஆயினும் என்! எங்கள் வீமசேனனுக்கோர் கடோற்கசன் பிறப்பதற்கு இடிம்பையின் உருவமும் குரலும் போதுமே. மற்று, தூயவீர இராமனுக்கோ, இக்காமவல்லிபிலிற்றிய தேனெல்லாம் பசையுடைய நயப்பொன்று மூட்டுதற்கேற்றதா யமைந்ததில்லை. தன்னைக் கண்டும் தன் மென்னடைகண்டும் இன்னுரை கேட்டும், பாய்ந்த சிந்தைபோ சிறிதுமின்றி உறைந்த முகத்தோடு உசாவிய இராமனை நோக்கிச் சூர்ப்பணகை, "என்னிது, மன்மதன் செயலொன்றும் இவன் எஞ்ஞான்றும் எய்திபறியான் போலும்; அத்தேவன் தன் பெயரைத்தானும் இவன் இதுகாறுங்கேட்டிலன்கொலோ' என்னும் ஐயம் மனத்துள் எய்தினளாகப்பெற்றதாற்றுன் இக்காமவல்லியாஞ் சூர்ப்பணகை, "காமன் என்று ஒருவன் செய்யும் வன்மை" என முதன்முதல்ஒருவரை மற்றவருக்கு அறிமுகம்செய்து வைக்கும் வாசகத்தால் காமதேவனைக் குறித்துரைத்துத் தன் நிலைமையைச் செப்பலுற்ருள்.

தன் வாய்ச்சொற்களை மாத்திரம் நம்பினவளு மல்லள் அவ் வஞ்சகக்கள்ளி - கண்தொழிலும் குறைவறக் காட்டியிருக்கின்று ளென்பது,

சேணுற நீண்டு மீண்டு செவ்வரி சிதறி வெவ்வே
றேணுறமிளிர்ந்துநானுவிதம்புரண்டிருண்டவாட்கட்
பூணியல் கொங்கை யன்னு ளம்மொழி புகற லோடும்
நாணில ளைய ளெய்ய ளல்லளு மல்ல ளென்றுன்.

[நெடுந்தூரம் தன் பார்வையைச் செலுத்தியும், அருகு நோக்கி மீண்டும், சிவந்த இரேகைகள் சிதறுவனபோல் தோன்றியும், வேவ்வேறு நிலைமைகள் விளங்கும்படி ஒளிர்ந்தும் பற்பல விதங்களில் புரண்டு இருண்ட வாள்போன்ற கண்களையும், ஆபரணங்கள் அணிந்த முலைகளையுமுடைய அவள், அந்த வார்த்தையைச் சொன்னவுடன், இராமன் "இவள் வெட்கமற்றவள், அற்பமானவள், நல்லவளும் அல்லள்", என்று எண்ணினுன்]

என அடுத்துவரும் பாசுரத்தால் தெரிகின்றது. எனினும் கண்ணெடு கண்ணிணை நோக்கு ஒக்காமையின் இங்கு வாய்ச்சொற்கள் என்ன பயனும் இலவாயின. உருவிலான் ஒருவன் செய்யும் உறுபகைக் கிலக்காகா இராமபிரான், இவள் பெண்மையை எள்ளி, "நாணிலள், நொய்யள், நல்லளும் அல்லள்" என மதித்துக் கழித்துவிட்டான். கலங்கலில் நாடகக் காட்சியுடைய புலவர்க்கெல்லாம்எவ்வெவ்விடத்தும் ஒருவகைபுரிந்த நிகழ்ச்சியனைத்தும்ஒன்றேயாய்த் தோன்றும்போலும். ஆங்கிலம் அறிந்தவர்களில், ஷேக்ஸ்பியர் வரைந்துள, "வீனஸும் அடோனிஸும்" என்னும் நூலினை யறியாதார் மிகச்சிலர். காமத்திற் கதிதேவதையாகிய வீனஸ் என்பவளே, வேட்டைமேல் வனத்தகத்தே வந்திருந்தவோர் பேரழகுவாய்ந்த இளவல் அடோனிஸ் என்பானைக்கண்டு கரைகாணுக் காமமுற்றவளாய்த் தன் வேட்கையை மிக விளம்பி யோர் தண்ணறும் முத்தம் அவன்பால் நனிநயந்து, கனிந்துருகும் மெய்யினேடும் மென்மொழி பல பகர்ந்து இரக்கலாயினுள். காமத்தின் செம்பாக முணர்வதற்குரியோ னல்லன் அம்முதிரா விளைஞனுதலின் இவன் சிந்தை அவள் விழைவினிற்கு எதிர்நடம் புரிந்திலது. அவ் வீனஸும் இக் காமவல்லியும் இருந்தநிலை யொக்கும். அடோனிஸ் காமஞ்சாலா இளையோனும், இராமன் காமங்கொள்ளாப் பெரியோனும் ஆகி மாறிநிற்பினுங் கைக்கிளைச் செய்தியாகுந்திறத்தில் இவ்விரு களங்களும் ஒன்றே. ஆதலின், "நாணிலள் நொய்யள், நல்லளும் அல்லள்" என்று சிந்தித்த இராமனைப்போன்றே, வீனஸின் தன்மையைக் குறித்து அவ்வடோனிஸ், "saith she is immodest and blames her amiss" என்று ஷேக்ஸ்பியர் கூறுவார். மொழி வேருயின் என், நாடக விழியொன்ருயின் கவிற்சிமுறை மாறுமாறில்லையாமே.

நாணத்தை நழுவவிட்டு நல்லதோர் அழகைத்தாங்கி நிற்பதும் வனிதையாமோவென் றெய்திய அதிசயத்தில் மனந்துறந்து

பேசல னிருந்த வள்ளல்
உள்ளத்தின் பெற்றி யோராள்
பூசல்வண் டாற்றுங் கூந்தல்
பொய்ம்மகள் புகன்ற வென்கண்
ஆசைகண் டருளிற் றுண்டோ
அன்றென லுண்டோ வென்னும்
ஊசலா லுலாவு கின்றாள்
மீட்டுமோ ருரையைச் சொல்வாள்

[பேசாமலிருந்த இராமனது உள்ளத்தின் தன்மையை அறியாதவளாகி, பூசல் செய்கின்ற வண்டுகள் ஆரவாரம் செய்கின்ற கூந்தலையுடைய அவ் வஞ்சமகளாகிய சூர்ப்பணகை, வேட்கையை விளம்பிய என்னிடத்து இவன் ஆசை கொள்வானோ அல்லது இணங்காமல் மறுத்துவிடுவானோ, என்று மாறிமாறி அலைகின்ற சிந்தனையுடன் மீண்டும் ஓர் வார்த்தை உரைப்பவளாகி]

எழுதரு மேனி யாயீண்
டெய்திய தறிந்தி லாதேன்
முழுதுணர் முனிவ ரேவல்
செய்தொழின் முறையின் முற்றிப்
பழுதறு பெண்மை போடி
ளமையும் பயனின் றேகப்
பொழுதொடு நாளும் வாளா
கழிந்தன போலு மென்றாள்

[சித்திரத்தில் எழுதுதற்கும் இயலாத அழகிய மேனியையுடையவனே, நீ இங்கு வந்திருப்பது அறியாமல், எல்லாவற்றையும் உணர்ந்த முனிவர்களுக்குக் குற்றேவல் செய்கின்ற காரியங்களை முறைப்படி முடித்துக் கொண்டிருந்ததனால் என் குற்றமற்ற பெண்மையும் இளமையும் பயனில்லாமற் போக, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பொழுதும் வீணாய்க் கழிந்துவிட்டன - என்றாள்]

இதனைக்கேட்டலும் இராமனுக்கிருந்த சிறிது ஐபமுந்தீர்ந்தது. பெண்மைக்கும் இளமைக்கும் ஓர் பயன் நயந்து வருகின்றாளல்லது, மணம்புகுந்து இல்வாழும் இயற்கையை நினைத்தா ளல்லளாவதை ஓர்ந்தானேனு, இழிந்த கருத்துடன் வந்துளோரையும் உயரிய நோக்கம்வைத்து உசாவுதல் உத்தமமாதலின்,

நிந்தனை யாக்கி நீதி
நிலையிலாள் வினைமற் றெண்ணி
வந்தன ளாகு மென்றே
வள்ளலு மனத்துட் கொண்டான்
சுந்தரி மரபிற் கொத்த
தொன்மையின் றுணிவிற் றன்று
லந்தணர் பாவை நீயா
னரசரில் வந்த னென்றான்

[அவ் வள்ளலாகிய இராமன், பழியுடைய இவ்வரக்கி நீதியாகிய நிலையில் நிற்கும் நினைவில்லாதவள்; வேறோர் காரியத்தைமட்டுமே எண்ணித் தன்பால் வந்தவளாவாள், என்பதை மனத்திற்கொண்டு, வெளிப்படையாக, 'அழகுடையவளே, நீ விழைவது, நம் சாதிக்கு உரிய பழைய ஒழுக்கத்திற்கு உடன்படாது. நீயோ பிராம்மணசாதிப் பெண், நானோ க்ஷத்திரிய சாதியிற் பிறந்தவன்''-என்றான்]

பொருத்தமும் மரபும்நோக்கிப் புரிவதாம் வதுவை தன்னைக் கருத்தினில் வைத்தாளல்லள், கைவருங் காமமொன்றே துரத்தவந் துற்றாளேனும் இராமனுல் சொல்லக்கேட்டுத் திருத்தியபுணர்ப்பினாலே அன்னதே சிந்தைபோல,

ஆரண மறையோ னெந்தை
யருந்ததிக் கற்பி னெம்மோய்
தாரணி புரந்த சால
கடங்கர்த மரபின் வறையல்
போரணி பொலங்கொள் வேலாய்
பொருந்தலை யிகழ்தற் கொத்த
காரண மிதுவே யாயி
னென்னுயிர் காண்பெ னென்றாள்.

[வேதத்தைச் சொல்லும் அந்தணன் என் தந்தை; அருந்ததி போன்ற கற்பினளாகிய என் அன்னை, உலகத்தை ஆண்ட சாலகடங்கர் எனனும் அரக்க அரசர்களது வம்சத்தில் பிறந்த பெண். ஆதலால், போரிலே எந்தப்படுகின்ற அழகிய வேலாயுதத்தை உடையவனே, என்னோடு கூடுவதன்றி நீ மறுத்தற்குக் காரணம் இதுவேயயின் (அது என்தாயின் பிறப்பை முன்னிட்டு நீங்கிவிடுகின்றமையால) இனி நானும் உன்னை மணந்து உயிர்பிழைத்தவளாவேன்'' என்றாள்]

இன்னணம் ஓர் கொடிப்பொழுதில் இராமனது குறிப்பிற்கொக்கத் தானுமோர் அமைதிகண்டுரைக்க வல்ல இச்சழக்கியின் சதுரத்தையுன்னி வியப்பெய்தி அச்செம்மல், கடிந்தவளை விலக்குதற்கு மனம்பெறுமல், மெல்லிய மொழிகளால் தவிர்த்தலே தக்கதென உளங்கொண்டனன். ஆகலின,

அருத்திய ளனைய கூற
அகத்துறு நகையின் வெள்ளைக்
குருத்தெழு கின்ற நீலக்
கொண்டலுண் டாட்டங் கண்டான்
வருத்தநீங் கரக்கர் தம்மின்
மானுயர் மணத்த னங்கை
பொருத்தமன் றென்று சாலப்
புலமையோர் புகல்வ ரென்றான்.

[ஆசைமிகுந்த சூர்ப்பணகை அவ்வாறு கூற, மனத்துள்ளேவிளைந்த இளஞ்சிரிப்பின் வெள்ளைக் குருத்துத் தோன்றுவதென்னப் பல்வரிசை சிறிது தெரியும்படி விளங்கிய நீலநிறமான மேகம்போன்ற இராமனும் அவளோடு விளையாடத் தலைப்பட்டவனாய், "நங்கையே, வருத்தமெல்லாம் நீங்கிய அரக்கர்களோடு மனிதசாதியார் மணப்பது பொருத்தமாகாதென்று மிகுந்த புலமையுடையவர் சொல்வார்கள் — என்றான்]

இதற்கும் தோற்கலள்; கணப்பொருத்தமும் உண்டென் றுரைப்பாளாகி,

பாாவநுஞ்சிரத்தைபாாநம்பத்தியின்பயத்தையோரா
திராவணன்றங்கையென்றதேழைமைப்பாலதென்று
அராவணையமலனென்னையறிவித்தேன்முன்னந்தேவர்
பராவினினீங்கினேனப்பழிபடுபிறவியென்றாள்.

[சொல்லரிய ஊக்கத்தோடு கூடிய என் தெய்வபக்தியின் பயனைத் தெரிந்துகொள்ளாமல், என்னை இன்னமும் இராவணன் தங்கை என்ற தன்மையில் வைத்துப் பேசுவது மதியீனமாகும்; ஆதிசேஷனில் பள்ளிகொள்ளுந் தூயவனாகிய திருமாலுக்கு நிகரானவனே, முன்னமே உனக்குத் தெரிவித்தபடி, தேவர்களை வழிபட்டுப் பழியுடைய அவ்விராக்ஷஸப் பிறவியினின்று நீங்கிவிட்டேன்-என்றாள்]

இராமன் புகல்கின்ற இடையூறெல்லாம் அடியுடன் அகற்றிவிடுகின்றாளந் நங்கை. இதன்மேல்,

ஒருவனே யுலக மூன்றிற்
கோங்கொரு தலைவ னாங்கி

லொருவனே குபேர னின்னோ
டுடன்பிறந் தவர்க ளன்னார்
தருவரேற் கோடு மன்றேற்
றமியையே றிடத்துச் சார
வெருவுவெ னங்கை யென்றான்
வேதத்தி னறிவை வென்றான்.

[வேதங்களின் அறிவைக் கடந்த இராமன், "நங்கையே, உன்னுடன் பிறந்தவர்களில் ஒருவனே, மூன்று உலகங்களுக்கும் உயர்ந்த தலைவனாகிய இராவணன்; மற்றொருவனே குபேரன்; அவர்களில் ஒருவன் உன்னை எனக்கு விவாகஞ்செய்து கொடுப்பானானல் கொள்வேன். இல்லையேல், உன்னுடன் தனியாகவோர் தனியிடஞ் சார்வதற்கும் அஞ்சுவேன்''—என்றான்]

இதற்கோ உடைவாள் இந்தப் பெண்மதி நுண்மை வாய்ந்த சூர்ப்பணகை. கொடுப்போரின்றிக் கலத்தற்குரிய காந்தருவமணதி னுண்மையை எடுத்துக் கூறி, "இது இயைந்தபின் எனக்கு மூத்தவேந்தர்க்கும் விருப்பமுள்ளதாகும்'', என இராமனைத் தேற்றுகின்றாள். அஞ்சினன் போல் இராமன் உரைத்த சொற்கள் இவளுக்குப் புதியதோர் கைப்பிடி கொடுத்தன. பேதம் தானம் என்னுமவ்விரு உபாயங்களையு மொன்றுய்க் கலந்து,

[நோக்கார்
முனிவரோ டுடையர் முன்னே முதிர்பகை முறைமை
தனியைநீ யாத லான்மற் றவரொடுந் தழுவற் கொத்த
வினையமீ தல்ல தில்லை விண்ணுமின் னாட்சி யாக்கி
இனியரா யன்னர் வந்துன் னேவலி னிற்ப ரென்றாள்.

[என் தமையன்மார் முன்னரே முனிவர்களோடுமுற்றிய பகை யுடையவர், முறைமை பாராதவர்; தனியாக இருக்கின்ற நீ தப்பவேண்டுமாயின் அவர்களைத் தழுவிக்கொண்டாலன்றிப் பிழைக்கும் வழியில்லை. அதற்கேற்ற வினையமும் என்னை நீ மணந்துகொள்வதே ஆகும். அதன்பின் அவர் உனக்கு இனியவர்களாகித் தேவலோகத்தையும் உனது ஆட்சிக்கு உரியதாக்கித் தாங்களும் உன் ஆணைக்கு அடங்கி நிற்பார்—என்றாள்]

இதனைத்தான் இராஜதந்திரிகள் diplomatic marriage என்பர். இதனால், இராமனது உரத்தைக் குலைத்துத்தன் வலையில் அவனை இறக்கிவிட்ட ஊக்கம் அவளுக்குச் சுரந்திருக்கவேண்டும். இதுகாறும் தான் அவனை இரந்தது போக இனி அவனே தன்னைப் பணிவுடன் இரத்தல்வேண்டியவண்ணம் நிலைமைதான் தலைகீழாய் மாறியதென்னப் பெருமிதம் பரந்த முகத்தினளாய்த் தன்னையவ் வீரன்வந்து சரண்புகக் காத்து நிற்பாள். இதுவன்றோ நாடகச் சூழ்ச்சியின் நன்னயம் பொதிந்த நுண்மை. அவள்குடித்த மனப்பாலெல்லாம் துண்ணென வொருகணத்தில் இளிவரப் புளிப்பதாகி,

நிருதர்த மருளும் பெற்றேன்
நின்னலம் பெற்றே னின்னோ
டொருவருஞ் செல்வத்தி யாண்டு
முறையவும் பெற்றே னென்றோ
திருநகர் தீர்ந்த பின்னர்ச்
செய்தவம் பயந்த தென்று
வரிசிலை வடித்த தோளான்
வாளெயி றிலங்க நக்கான்

[அரக்கர்களுடைய அருளும் பெற்றேன்; உன் அழகின் இன்பத்தையும் பெற்றேன்; நீங்காச் செல்வத்தில் உன்னோடு எப்பொழுதும்கூடி வாழ்கின்ற பாக்கியத்தையும் பெற்றேன். அழகிய அயோத்திமா நகரைவிட்டு நீங்கியபின் யான் செய்த தவம் எனக்குக் கொடுத்தது இவ்வண்ணம் ஒவ்வொன்று—எத்தனையோ! எனக் கட்டமைந்த வில்லைத் தாங்கிய தோள்களையுடைய இராமன் தன் ஒளிபொருந்திய பற்கள் விளங்கும்படி சிரித்தான்]

மையலால் மதியிருண்ட அவ்வரக்கிக்கு இது பரிகசமென்பது தெரியவில்லையாயின் மிகவும் பரிவுகாட்டற்குரியவளே என்பதில் ஐயமில்லை.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்
கவனிக்க "சத்வைத்யசாலை" நஞ்சன்கூடு ஏமாறுதீர்

குழந்தைகளுக்கு :
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலகதைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

யுனைடெட் ஸோல் ஏஜண்டு: கன்ஸர்ன், மதுரை.

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.

டிப்போ: பம்பாய். கல்கத்தா.
நஞ்சன்கூடுபல்பொடி
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) டெடா,மெடிகேடட்-டப்பி
பிராஞ்சு: மதுரை. காஞ்சீபுரம்

கலாநிலயச் சொல்லூ டாட்டம். 2.

இடம்—வலம்

1. சென்னையில் பிரசுரமாகும் ஒரு சிறந்த தமிழ் வாரப் பத்திரிகை
5. நூதனம்
7. புசித்து
8. இரப்பவன்
10. மாமியார் வீடு
12. பூமி
15. மேலெழுதல்
16. ஐம்பொறிகளிலொன்
18. பெருஞ்செல்வம் [று
19. சூரியன்
21. தாய்மை
22. விதை
24. செருக்கு
25. பேய்த்தேர்
26. ஆசையை உணர்த்தும் ஓர் இடைச்சொல்
27. ஆண்மான்
28. வயிறு



மேல்—கீழ்

1. ஆறு
2. உறுதி
3. வழுக்கி
4. தன்னலங் கருதாமல் பிறர்பொருட்டு உதவல்
5. நுழைய
6. வருத்தம்
9. ஓர் அசுரன்
11. மாசு
13. பகுபத உறுப்பு
14. நுழையாத
17. புகழ்தல்
18. காரணம்
20. காற்று
21. சகரர்களுடைய அன் [னே
22. தந்திரம்
23. யானை
25. பருவதம்

கடைசிநாள் :—1932 வருடம், ஜுன் மாதம், 6 தேதி

இதற்குப் பிழையற நேரான விடை யனுப்புவார்க்கு, கலா நிலயம், 1928-வது அல்லது 1930-வது அல்லது 31-வது வருட ஆப்லெதர்—கில்ட் பைண்ட் புத்தகம் ஒன்று வெகுமதி யளிக்கப்படும். அல்லது இவ்வருடமேனும் அடுத்த வருடமேனும் சந்தாத் தொகையின்றி நம் பத்திரிகையை ஒரு வருடம் இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம். இது அவர் இஷ்டத்தைப் பொருந்தியது.

1. இந்தக் கட்டங்கள் மாதிரியாகவே வேறோர் காகிதத்தில் வரைந்துகொண்டு அதனில் விடையை எழுதி யனுப்பவும்.

2. அவ்வாறு அனுப்புபவர், அதனோடு காலணுவுக்குக்காலணுத் தபால் தலைகள் (பதினுறு) அனுப்புதல் வேண்டும். ஒருவரே, பல விடைகள் முயன்று, வேறு வேறு அனுப்பினும் அனுப்பலாம். ஆனால், ஒவ்வொன்றிற்கும் 4 அணு தபால் தலை யனுப்ப வேண்டும்.

இலங்கை வாசிகள், அவ்வூர்த் தபால் தலைகள் 25 சதம் அனுப்பினாலும் ஏற்றுக் கோள்ளப்படும்.

3. விடைகள், எம்முடைய காரியாலயத்திற்கு, அடுத்த ஜுன்மாதம் 6உக்குள் வந்து சேர்ந்துவிட வேண்டும்.

4. வந்த விடைகளில் ஒன்றுமட்டுமே பிழையில்லாது நேரா யிருந்தாயின் அதனை அனுப்பியவருக்கு முன்னுரைத்தபடி பரிசளிக்கப்படும். நேரிய விடைகள் ஒன்றிற்கு மேற்படுமாயின், அதனை அனுப்பியவர்களின் பேர்களை எல்லாம் சீட்டுக் குலுக்கிப் போட்டு, யார் பேர் வருகின்றதோ அவர் ஒருவருக்கே அளிக்கப்படும்.

5. விடையின் நேர்மையும் மற்ற விடயங்களையும் பற்றி மானேஜர் செய்கின்ற தீர்மானமே முடிவானது. அதனைப்பற்றி எவ்விதக் கேள்வியும் எழுதலாகாது.

6. இந்தப் போட்டியில், நம் சந்தாதார்கள் மாத்திரமன்றி ஏனையோரும் கலந்துகொள்ளலாம்.

7. விடைகள், பேர், மேல்விலாசம் வேண்டிற பரிசு, முதலியன தெளிவாய் எழுதப்படல் வேண்டும்.

விடைகளை, மானேஜர், கலா நிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை
என்னும் விலாசத்திற் கனுப்பவும்.

கலாநிலயச் சொல்லூடாட்டம் நம்பர் 1. விடையும் முடிவும்.

நேரான விடை :—

இடம்—வலம்:—(1) வாசவன், (4) ஆமா, (7) கிரம், (8) மாவிந்தர், (10) சம்புமாலி, (12) திரு, (13) தனிமை, (15) மறை, (16) நகர், (18) திறன், (19) பட்டு, (20) கலி, (22) சுபக்கும், (23) கடல், (24) பலகை, (25) பகடு, (26) தின், (27) களி, (28) குடர்.

மேல்—கீழ்:—(1) வாகீசர், (2) சரம், (3) வம்பு, (4) ஆவி, (5) மாந்தி (6) அம், (8) மாலினி (9) தருமன், (11) மாதர், (14) மைதிலி, (16) நட்பலன் (17) கடுக்கை, (19) பசுபதி, (20) கம்பளி, (21) மல்லர் (23) கடுகு.

நேரியவிடை யனுப்பிவர்:—(1) R. கிருஷ்ணமூர்த்தி, கோயமுத்தூர், (2) V முத்துக்குமாரசாமி செட்டியார், சென்னை, (3) U. M. துரைசாமி பிள்ளை, சென்னை, (4) இ. ரா. தியாகராஜன், காயாமொழி (5) கெ. வெங்கிடசாமி ரெட்டியார், வி. புதூர், (6) சி. கந்தையா, மன்னூர், (7) வி. சரவணமுத்து மன்னார் (8) விஞசித்தம்பி கேஸ்டஸ் (9) K. A. ஷண்முகம் செட்டியார், திருப்பத்தூர், (10) ஜான் செல்லையா, சென்னை, (11) C. ராஜாராம் பிள்ளை, சென்னை, (12) S பட்டம்மாள், சென்னை, (13) V. கோவிந்தசாமி, கனகம்பாளையம், (14) C. திருஞானசம்பந்தன், உக்கிரன் கோட்டை—இந்நண்பர்களில் சீட்டுக்குலுக்கிப் போடப் பெயர்வந்து பரிசுபெற்றவர், ஸ்ரீமான் இ. ரா. தியாகராஜன். காயா மொழி.

வர்த்தமானம்

நாஷனல் இன்ஷியூரன்ஸ் கம்பனி.
25-வது ஆர்டினரி ஜனரல் ஷேர்ஹோல்டர் வருடக் கூட்டம்.

நாஷனல் இன்ஷியூரன்ஸ் கம்பனி, 25-வது ஆர்டினரி ஜனரல் வருடக்கூட்டத்தில் தலைமை வகித்த ஸ்ரீமான் J. சவுத்ரி அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு:—

1932-வது வருடம் ஏப்பிரல் மாதம் 3ㅣ தேதியோடு முடிவடையும் ஒரு வருடத்தில் நமது இன்ஷியுரென்ஸ் கம்பனியானது தன்னுடன் விவகார சம்பந்தம் வைத்துக்கொண்டுள்ளார்க்கு நம்பிக்கையும் திருப்தியும் தரும்வகையில் வளர்ந்துளது என்பதைச் சிறிது விளக்கிக்காட்டுகின்றேன். இவ்வருஷத்தில் இதற்கு முன்வருஷத்தைக் காட்டிலும் 20 லட்ச ரூபாய்க்கு வியாபாரம் வளர்ந்துளது; அதாவது கம்பனி வியாபாரம் 100க்கு 16% வளர்ந்துளது நமது கம்பனியின் மொத்த பிரீமிய வருமானம் 2,40,000 ரூபாய் இவ்வருடத்தில் அதிகமாய் வந்துளது. நாட்டின் பொருளாதார நிலை கெட்டுளபோதிலும் நமது கம்பனி வளர்ச்சி குன்றுமல் நடத்தப்பெற்றுளது.

தற்காலப் பண நெருக்கடியினுல் நமது பாலிஸிஹோல்டர்களில் சிலர் பிரீமியம் சரியே கட்டிவர இயலாமல் நிறுத்த நேர்ந்துளது. அத்தகையார் இடையில் நின்ற பாலிஸிகளை மறுபடியும் புதுப்பித்துக்கொள்ளவேண்டி ஒரு புதிய முறையொன்று ஸ்தாபித்துள்ளோம். இம்முறை பலருக்கு உதவியாயிருக்கும் என்று எண்ணுகின்றேன்.''

கம்பனி நடைமுறைச் செலவும் சிக்கனமாகவே செய்யப்பெற்றுளது என்பதை வருட அறிக்கை காட்டுகின்றது.

***

வேள்பாரி:—இத் தலைப்புடைய புத்தகம் இரங்கூன் நவீன கதா புத்தகசாலையினரால் பிரசுரிக்கப்பெற்றுளது. காந்திதாஸன் என்பவர் இதன் ஆசிரியர். பாரியென்னும் வள்ளலின் சரிதை இதுவாகும். பிறவியின் பயன் கொடைசெய்து வாழ்வதல்லால் வேறில்லை என்று வாழ்ந்தவர் இப்பாரி வள்ளல். கொழுகொம்பி[illegible] ஒரு செடிக்குத் தன் பொன்தேரையே கொழுகொம்பாய் அளித்த இப்பெரியாரின் சரிதை, தன்னைப் பின்பற்றுவதே வாழ்வின்நோக்கம் என்பதை இக்கால மாந்தருக்கு ஒருபோதல்லாக்கல் ஒருபோதாவது வற்புறுத்தாது போகாது. இப்புத்தகம் வேண்டுவோர் இரங்கோன், மாண்ட்கமரி வீதி, நவீனகதா புத்தகசாலையினிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

விலை. 8 அணு.

***

விங்கிளர், நெபிலிஸ் என்னும் இரு ஜெர்மானிய விஞ்ஞான நிபுணர் மிகவும் வேகமாய்ச் செல்லக்கூடிய ராக்கட்டுகளைக் கண்டுபிடித்து வருகின்றனராம். அத் ராக்கட்டுகள் ஒரு மணி நேரத்தில் ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவிற்குத் தபாலைக் கொண்டுபோகுமாம்.

***

கல்கத்தாவிலுள்ள [illegible] ர்ஜி [illegible] ரம் னும் ஒரு [illegible] வான்தூரம் எடுக்கும் [illegible] இயந் ஒன்றைக் [illegible] படம் [illegible] னராம். [illegible] சிச்சுலை [illegible] த்திருக்கு இளிமா [illegible] என். கோஷ் [illegible] கொண்டுள்ள [illegible] ளன் [illegible] கத்தியில் [illegible] பெற்றுளது. ஐரோப் [illegible] கத்தியில் [illegible] தைக் காட்டிலும் இது [illegible] திறந்து [illegible] யதாம்.

[illegible] ரு து வரும் [illegible]

[illegible] ம் குறைந்த சமயத்திற்குக் குருமார் அவ [illegible] சமயம் உலகத்தில் நிலவமுடி [illegible] ருவும் நண்பர்கள் ஸ்ரீமான் ஜினராஜதாஸ [illegible] மா? [illegible] ரைக் கேட்க அன்னதற்கு "ஸோஷ்யலிஸ்டு" என்னும் பத்திரிகையில் அவர் எழுதிய விடை வருமாறு:—

மனிதனைக் கடவுளோடு இணைத்துவைப்பதே சமயத்தின் வேலை. வழிதெரிந்து பற்றுபவன் குருமாரின் உதவியில்லாமல் கடவுளை எய்தலாம். இக்கருத்தையே பகவான் கீதையில கூறிவைத்துள்ளார். வெள்ளக்காலத்தில் ஜலம் எங்கும் நிறைந்துளது. அப்பொழுது ஜலத்திற்காக ஒருவன் கிணறு தேடவேண்டியதில்லை. கடவுளை அடையும் பாதையைத் தெரிந்தவன் வேதம் படிக்கவேண்டியதில்லை; பிற ஆசாரங்களை அனுஷ்டிக்கவேண்டியதில்லை. இதைத்தான் தீர்க்கதரிசனம் உடைய பெரியவர்கள் கூறியிருக்கின்றனர்.

"ஆனால் குருமார்களுக்கும் சமயத்தில் இடமிலாது போகவில்லை. நிலக்கரி எண்ணெய் இவைகளின் உதவியால் இயந்திரம் மின்சார சக்தியை உண்டாக்குகின்றது. அச்சக்தி கம்பிமூலம் வந்து மின்சார விளக்காய் எரிகின்றது. அதுபோல் தெய்வசக்தி எங்கும் பரவ உபகரணங்கள் தேவை. மின்சாரக் கம்பிகள் எப்படி மின்சாரசக்தி யெங்கும் பரவ உதவிபுரிகின்றனவோ அதுபோல குருமார்களும், ஆசார அனுஷ்டானங்களும் தெய்வசக்தி எங்கும் வியாபிக்கவும், அதை நாம அறியவும் உதவுகின்றன.

"விடுதலை என்பது உள்ளச் சுத்தியாகும். உள்ளம் பரிசுத்தமாகுமாயின் கடவுள்சக்தி வியாபகமாகும். இச் சுத்தி செய்துகொள்ளக் குருமார் உதவுவார்கள். வயித்தியர் இரணச்சிகிச்சை செய்யும்பொழுது, இரணத்தில் விஷம் படாமலும், தொத்துத் தன்மையுடைய நோய் பற்றுமலும் பார்த்துக்கொள்கின்றார். அங்ஙனமே குருமார்கள் நாம் உய்யும் வழியைப் போதித்து, நாம் பாதைவிடுத் தலையும்போது நம்மைப் பாதுகாத்து வருகின்றனர். எங்ஙனம் புண் ஆறுவதற்கு மனிதனது உடற்சக்தி தேவையாயிருக்கின்றதோ அதேபோல் விடுதலைபெற மனிதனிடம் வேட்கை யிருக்கவேண்டும், என்வே நாம் உண்மைக் குருமார்களை ஆதரிப்போம்."

ஆ. ஸி. கஸ்தூரிரங்கய்யர் B.A., L.T.,
இயற்றிய
:: பாகவத வினு விடை :: [illegible]50
சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிட்[illegible] விரி பக்கங்களும் 20 சித்திரப்பட[illegible]ம், [illegible] சுகர் கதைவான அட்டவணையும், வி[illegible]யங்களின் மெய்க்கருத்தை போன்ற பலமுக்[illegible]களும் அடங்கியுளது. விலை [illegible]
விளக்கும் [illegible] ஆபீஸ், 323, தண்டையாரப்பேட்டை பால[illegible] வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

தேகபலம் —
:: புத்திர சந்தானம் ::
இவைகளையுண்டாய எங்கள் ஆதங்க நிக்ரஹ மாத்திரைகளை உபயோகியுங்கள்.
சென்ற [illegible] வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று வருகின்றன.
மேலும் தேக அசதி, மலச் சிக்கல், ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கண்டிக்கின்றன.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1.
5 டப்பிகள் ரூ. 4.
இனும்! காம சாஸ்திரம் இனும்!
கேட்போருக்கு இனமாகவும், தபாற்செல வில்லாமலும் அனுப்பப்படும்.
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

188969

KALANILAYAM
Reg. No. M. 2324.

— சரஸ்வதி பவுண்டரி —

தந்திவிலாசம்:—காஸ்டிங்.] [Established 19‿4] [டெலிபோன் நே:—3002

96. புளியந் தோப்பு ஹைரோட், பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.

எம்மிடம் தேர்ச்சிபெற்ற இந்தியத் தொழிலாளர்களால் தயாரிக்கப்பட்ட ரங்கூன் & அமரிக்கன் டைப், ரைஸ்ஷெல்லர்களும், பாலிஷிங் கோன்களும், மூன்று தினுசாயுள்ள சவரன் டை பிரஸுகளும், வெள்ளிப் பாத்திரங்கள் செய்யும் பிரஸுகளும், பொன் வெள்ளித் தகட்டாலைகளும், கரும்பாலைகளில் கல்கத்தா சைஸ்களும், சாதா மூன்று கால் கரும்பாலைகளும், தண்டவாளச் சுழல்படிகளும், தண்டவாளத் தூண்களும், பலவிதமானத் தண்டவாளக் கிராதிகளும், ஆயில் காஸ் மோட்டார் எஞ்சின்களுக்குத் தேவையாயுள்ள ஸிலிண்டர், வாட்டர் ஜாகட்டுக்களும், மற்றத் தனிச் சாமான்களும், எங்கல்பர்க் டைப் நெம்பர் 1, 2, 3, 4, 7 & 8 பால்பேரிங் & சாதா ரைஸ் ஹல்லர்களும், அவைகளுக்குவேண்டிய தனிச் சாமான்களும், தண்டவாள சாதா புல்லிகளும், படபாதிப் புல்லிகளும், கிடைக்கும். ஆயில் காஸ் ஸ்டீம் எஞ்சின்களின் லைனரை ரிபேர் செய்தும் புதிய பிஸ்டன் போட்டும் கொடுக்கப்படும்.



முனிஸிபாலிடிகளுக்குத் தேவையாயுள்ள எலக்ட்ரிக் விளக்குப் போஸ்டுகளும், சாதாரண 1, 2, 3, 4, 5 கிளையுள்ள லாந்தர் போஸ்டுகளும், வாராவதிக்குப் போடக்கூடிய லாந்தர்போஸ்டுகளும் பிராக்கட்டுக்களும், மேனேல் கவர்களும், திம்மிசுகளும், குப்பைவண்டி இன்லெட் அவுட்லெட் வால்வுசெட்டுகளும், பைப்பு பிட்டிங்கிற்கு வேண்டிய தண்டவாளக் குழாய்களும், கப்பிளிங் பைப் டீ, பிரான்ச் ரெடியூஸர்களும், தோட்டத்தில் போடக்கூடிய தண்டவாளப் பெஞ்சு கால்களும், பள்ளிக்கூடத்துக்கு வேண்டிய சாதா மடிப்புப் பெஞ்சுகளும் கிடைக்கும்.

மைல்ஸ்டீல் தகட்டினுல் செய்த பாயிலர் சிம்னிகள், டாங்குகள், நெல் அவிக்கும் பாய்லர்கள், டிரஸ்கள், வாராவதிகள் இன்னும் பலவிதமான ரிவிட்டு வேலைகள் யாவும் நேர்த்தியாய்த் தயாரித்துக் கொடுக்கின்ரேம்,

சார்ஜிகள் மிகவும் சரசம். குறித்த காலங் தவறுவதில்லை. கேட்லாக்கிற்கு எழுதவும்.

7-வது வருடம்! 7-வது வருடம்!!

அமிர்தகுணபோதினி

இது ஒரு நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை

ஒரே ரூபாய் சந்தாவில் 64 பக்கங்கள்.

எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு இதன் பத்திராசிரியர்

...ள் "அமிர்தகுணபோதினி"யைப்

இதுபோன்...த்திருக்கிறீர்களா ?

...வரை தமிழில் வெள...தாந்திர ஸஞ்சிகை இதுமும் சிறந்ததுமான வழியில்லை. இது அபூர்வ... கைகளை யொப்ப உயர்தரமாய் நில மாதஸஞ்சிறது. பொதுநலப் பத்திரிகையாயும், பிரஃபுடுகின்டப் பத்திரிகையாகவும் விளங்குகின்றது. ...லாம் கருத்து, எல்லாம் அறுப...ம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய செவிக்கினிய அலங்கார வசன மழை. 64 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிகை இது ஒன்றேதான். பார்ப்பதற்கும் அழகு, படிப்பதற்கும் இனிமை, நினைக்க நினைக்க மனோகரமே. இந்த ஸஞ்சிகைக்கு நிகராக வேறெந்த ஸஞ்சிகையும் கிடையாது. 31,000 சந்தாதாரர்கள் உள்ளது. வருடசந்தா ரூ 1. வெளி நாடுகளுக்கு ரூ 1-8-0.

மாதிரி காபி வெளிநாடுகளுக்கு இனும்.

புரொப்ரைட்டர்

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்தகுணபோதினி ஆபீஸ்,
நெ. 302, தங்கசாலைத் தெரு, சென்னை.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Policies Issued in 1931 for over	Rs. 1,32,33,000
Showing an increase over the New Business figure for 1930 of	16.54 %
Claims paid up to end of 1931 over	Rs. 90,00,000
Invested Funds amount to over	Rs. 1,75,00,000

LOW RATES LIBERAL CONDITIONS
NEW TABLES NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. ..S & Co., Managers. OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE AND
GENERAL INSU...
NATIONAL INSU... COMP...
7, Council House S... BUILDING,
Calcutta.

The Branch Secretary,
Madras Branch,
113, Armenian Street, OR ...S & Co., Managers.
Madras.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., (Editor)